# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 284 | சனி, ஏப்ரல் 27, 2024 | 16 பக்கங்கள்




## இலங்கை வந்த ஈரான் அதிபர்!
## ரணில் வகுத்திருந்த திட்டங்கள்

அகிலன்



## பொறுத்திருக்கக் கேட்பவர்கள் "டீல்" போட காத்திருப்பவர்கள்

ஆய்வாளர் நிலாந்தன் செவ்வி




© 2024 இலக்கு இணையம்

# இலங்கை தமிழ் அரசு கட்சியின் வழக்கு ஒத்திவைப்பு

## எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடல்



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நிருவாகத் தெரிவு தொடர்பான வழக்கு கடந்த புதன்கிழமை(24) திருகோணமலை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் பின் குறித்த வழக்கு மே மாதம் 31ம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்.

குறித்த வழக்கின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் இவ் வழக்கிற்கு 07 எதிராளிகள் பெயரிடப்பட்டுள்ள நிலையில் 2ம்,4ம் எதிராளிகளான தலைவராக தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஸ்ரீதரன்,செயலாளராக தெரிவாகிய ச.குகதாசன் ஆகியோர்களுக்கு சார்பாக ஆஜராகினேன். சுமார் மூன்று மணி நேரங்கள் இவ் வழக்கு விவாதிக்கப்பட்டு சமர்ப்பணம் செய்யப்பட்டது.

கடந்த பெப்ரவரி 15ம் திகதி வழகுகல் தாக்கல் செய்யப்பட்டு 29ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# தந்தை செல்வாவின் 47 ஆவது நினைவு தினம்



இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட கிளையானது கட்சியின் நிறுவனர் தந்தை செல்வநாயகம் அவர்களது 47 ஆவது நினைவு நாளை முன்னிட்டு நினைவு எழுச்சி கூட்டமொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மாவட்ட தலைவர் ச.குகதாசன் தலைமையில் இடம் பெறவுள்ள குறித்த நிகழ்வானது 27.04.2024 திகதியன்று மாலை 2.30 மணிக்கு திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம் பெற ஏற்பாடாகியுள்ளது.

இதில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் நூறு

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# ரெஸ்லா நிறுவனத்தின் வருமானம் 55 விகிதத்தால் வீழ்ந்தது

அமெரிக்காவின் ரெஸ்லா நிறுவனத்தின் வருமானம் இந்த வருடம் 55 விகதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதாக அந்த நிறுவனம் கடந்த செவ்வாய்கிழமை(23) தெரிவித்துள்ளது.

மின்சார கார்களின் விற்




பனையே கடுமையான பாதிப்புக்களை சந்தித்துள்ளது. இந்த வருடத்தின் முதல் 4 மாதங்களின் அது ஒரு பில்லியன் வருமானத்தை எட்டியுள்ளது. ஆனால் கடந்த வருடம் 2.51 பில்லியன் வருமானத்தை ஈட்டியிருந்தது.

தற்போதைய வீழ்ச்சியை சரி செய்வதற்கு மிகவும் மலிவான வாகனங்களை உற்பத்தி செய்யப்போவதாக அமெரிக்காவின் ரெக்சஸ் மாநிலத்தை தளமாகக் கொண்ட ரெஸ்லா நிறுவனம் தெரிவித்துள்ளது.

தமது புதிய வாகனங்கள் அடுத்த வருடத்தில் விற்பனைக்கு வரும் என அந்த நிறுவனத்தின் உரிமையாளர் இலோன் முஸ்க் தெரிவித்துள்ளார். புதிய வகை வாகனங்கள், மிகப் பெருமளவான உற்பத்தி, செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு என்பவற்றை புதிதாக அறிமுகப்படுத்தப்போவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சீனாவின் பி.வை.டி என்ற மின்சார வாகன உற்பத்தி நிறுவனத்திற்கு அடுத்த நிலையில் ரெஸ்லா நிறுவனம் உள்ளது. ஆனால் சீன நிறுவனம் மிகவும் மலிவான விலையில் வானங்களை உற்பத்தி செய்வது ரெஸ்லா

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# காசா படுகொலைகளுக்கு எதிராக அணிதிரளும் அமெரிக்க பல்கலைக்கழக மாணவர்கள்




காசாவில் இஸ்ரேல் மேற்கொள்ளும் படுகொலைகளை நிறுத்துமாறு கோரி பெருமளவான மாணவர்கள் அமெரிக்காவின் பல பல்கலைக்கழகங்களில் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.


மாணவர்களின் இந்தப் போராட்டத்தில் 10 இற்கு மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்துள்ளதுடன், நாளுக்கு நாள் அதன் வேகம் அதிரித்துவருகின்றது.

மாணவர்களின் போராட்டங்களை அடக்குவதற்காக அமெரிக்கா பெருமளவான காவல்த் துறையினரையும், இராணுவத்தினரையும் பல்கலைக் கழகங்களில் குவித்து வருகின்றது.

ரெக்ஸஸ் மற்றும் கலிபோர்னியாவில் உள்ள பல்கலைக் கழகங்களில் போராட்டங்களில் ஈடுபட்ட பெருமளவான மாணவர்கள் கடந்த புதன்கிழமை(24) கைது

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# உக்ரைனுக்கு நீண்டதூர ஏவுகணை - ரஸ்யா சீற்றம்



உக்ரைனுக்கு நீண்டதூர ஏவுகணையை அமெரிக்கா இரகசியமாக வழங்கியதும், அதனை கடந்த வாரம் கிரைமியா பகுதி மீதானதாக்குதலுக்குஉக்ரைன் பயன்படுத்தியதையும் அமெரிக்கா கடந்த வியாழக்கிழமை(25) உறுதிப் படுத்தியுள்ளது.


அமெரிக்காவின் இந்த நடவடிக்கைக்கு வொசிங்டனுக்கான ரஸ்ய தூதுவர் அனரெலி அன்ரனோவ் தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார். ஏதுவுமற்ற பேச்சுவார்த்தை ஒன்றை சுவிற்சலாந்தில் முன்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# ரிக்ரொக் சமூகவலைத்தளத்தை தடை செய்யும் மேற்குலகம்

ரிக்ரொக் சமூகவலைத்தளத்தை அமெரிக்கா தடை செய்வதற்கு திட்டமிட்டுள்ள அதேசமயம், அதனை தடை செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியமும் தயாராகி வருகின்றது.

சீனாவின் பின்புலத்துடன் இயங்கும் இந்த சமூகவலைத்தளம் இஸ்ரேல் - பாலஸ்தீனப் போர் தொடர்பில் உடனுக்குடன் தகவல்களைப் பரிமாறிவருவது அமெரிக்காவின் கூகுள், முகநூல், யூரியூப் மற்றும் ருவிட்டர் போன்ற




தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# சீனா நிறுவனம் மீது ஐரோப்பிய அதிகாரிகள் சோதனை



நெதர்லாந்தில் உள்ள சீனாவின் பாதுகாப்பு உபகரணங்களை உற்பத்திசெய்யும் நிறுவனம் மீது ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த அதிகாரிகள் திடீர் சோதனை மேற்கொண்டது குறித்து சீனா தனது கவலையை வெளியிட்டுள்ளது.

கடந்த செவ்வாய்கிழமை(23) நெதர்லாந்து மற்றும் போலந்தில் உள்ள இந்த நிறுவனங்கள் மீது திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிறுவனத்திற்கோ அல்லது சீன அதிகாரிகளுக்கோ அறிவிக்காது ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர். இது அந்த

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# முல்லைத்தீவில் 74 வீதமான காணிகள் வன இலாகாவினுடைய பொறுப்பில் இருக்கின்றது

முல்லைத்தீவில் தமிழர்களுடைய பூர்வீக நிலங்களை அபகரித்து சிங்கள மக்கள் குடியமர்த்தபடுகிறார்கள் என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார். புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே



அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "முல்லைத்தீவில் தமிழர்களுடைய பூர்வீக நிலங்களை ஆட்சியாளர்கள் அபகரித்து கொண்டிருக்கிறார்கள். அதாவது முல்லைத் தீவு மாவட்டத்தின் நிலப்பரப்பில் கூடுதலான நிலப் பரப்பினை ஒவ்வொரு திணைக்களங்களின் ஊடாகவும் அபகரித்து அவற்றில் சிங்கள மக்களுக்கு வழங்கி கொண்டிருக்கும் நிலையே காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மொத்த நிலப் பரப்பில் கிட்டத்தட்ட 5 இலட்சத்தி தொண்ணூறாயிரம் ஏக்கரில்74.24வீதமானகாணிகள்வனஇலாகாவினுடைய பொறுப்பில் இருக்கின்றது. விடுதலைப் புலிகளின் காலத்தில் இந்த பகுதிகளுக்கெல்லாம் வர பயந்து கொண்டிருந்த நிலையில் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் அடர்ந்த காடுகள் என்று கூறக்கூடிய அளவில் 36.72 வீதமான காணிகளும் அதாவது 2 இலட்சத்தி இருபத்தி இரண்டாயிரத்தி ஆறு ஏக்கர் காணிகள்தான் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருந்தது.

மக்களுடையபாவனையில்இருந்தகாணிகள்2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் மௌனிக்கப்பட்டதன் பின்பு ஒவ்வொரு திணைக்களங்களாக ஆட்சியாளர்கள் மக்களுடைய பெரும்பாலான விவசாய காணிகளை அபகரித்து வைத்துள்ளார்கள். அபகரிக்கப்பட்ட காணிகளில் சில இடங்களில் சிங்கள குடியேற்றங்கள், அதாவது வெலிஓயா என்று சொல்லக்கூடிய 28,500 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு சிங்கள குடியேற்றத்தை ஏற்றி தனி ஒரு சிங்கள பிரதேச செயலக பிரிவாக உருவாக்கி இன்று எங்களுக்கு சவால் விடும் அளவுக்கு மக்கள் தொகையை மேலும் மேலும் வளர்த்தெடுக்கும் விதமாக அவர்களுடைய செயற்பாடுகள் காணப்படுகின்றன.

இது தவிர 2009 ஆம் ஆண்டுக்கு பின் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்பு ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 484 ஏக்கர் காணிகளை (30.37 வீதம்) அபகரித்து வன இலாகா வைத்திருக்கின்றது. இது தவிர 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 42631 ஏக்கர் காணி அதாவது 7.15 வீதமான காணிகள் அபகரித்து வைத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 2 இலட்சத்தி பத்தாயிரம் ஏக்கர் காணிகள் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்பு வன இலாகாவினால் மட்டும் அபகரிக்கப்பட்டு எல்லைக்கல்லினை நாட்டி தமிழ் மக்களுடைய பூர்வீக காணிகளை அபகரித்து வைத்திருக் கிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய நட வடிக்கைகள் குறைவடைந்திருப்பதற்கு முழுமுதல் காரணம் வனஜீவராசிகள் , வன இலாகா, தொல்லியல் திணைக்களங்கள் அதனைவிட மகாவலி எல் வலயம் இவ்வாறாக மக்களுடைய காணிகளை அபகரித்து வைத்திருக்கின்றார்கள். நேற்றையதினம் முல்லைத்தீவு மாவட்டத்தினுடைய ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் காதர் மஸ்தானின் அறிக்கை ஒன்றில், ஏற்கனவே உள்ள

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## சிங்களமயமாக்கலால் நிலஇழப்பு, இந்திய மயமாக்கலால் இறைமை இழப்பு உலகமயமாக்கலால் இருப்பு இழப்பு இதுதான் ஈழத்தமிழரின் இன்றைய நிலை

ஈழத்தமிழர்களின் இறைமையையும் உள்ளடக்கிய நாடு என்று பிரித்தானிய அரசு சிறிலங்காவுக்கு அளித்த அங்கீகாரமே இன்றுவரை சிறிலங்காவை உலகநாடுகள் நாடு என்ற நிலைப்பாட்டில் தங்களோடு இணைத்து தங்களின் இறைமையைப் பாதுகாக்கத் சிறிலங்காவையும் சிறிலங்காவின் இறைiமையைப் பாதுகாக்கத் தங்களையும் முன்னிலைப்படுத்திச் செயற்பட்டு வருகின்றன. இதனாலேயே ஈழத்தமிழர் தேசியப்பிரச்சனை என்பது ஈழத்தமிழர்களின் இறைமையை மீள் உறுதிப்படுத்தி அவர்களின் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளின் அடிப்படையில் காலனித்துவத்தால் தீர்க்கப்படாத ஐக்கிய நாடுகள் சபையால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை என்பதனை இலக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றது. ஐக்கிய நாடுகள் சபை ஈழத்தமிழரின் காலனித் துவகாலப் பிரச்சினையைத் தீர்ப்பதில் காட்டும் காலதாமதத்தால், 18.05.2009 இல் உச்சம் பெற்ற 176000 ஈழத்தமிழர்களைத் தேசமாகவே இனஅழிப்புச் செய்த சிறிலங்காவின் முள்ளிவாய்க்கால் இனஅழிப்புப் போரின் பின்னர் இதுவரை முல்லைத் தீவு மாவட்டத்தின் ஐந்து இலட்சத்து தொண்ணூறாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் 74.24 வீதமான நிலப்பரப்பு சிறிலங்காவின் வனத்துறையால் படைபலத்துணையுடன் அபகரிக்கப்பட்டுள்ளது.

2009க்கு முன்னர் அடர்ந்த காடுகளாக இருந்த 36.72 வீதமான காணிகள் இரண்டு இலட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து ஆறு ஏக்கர் காணிதான் வனத்துறையிடம் இருந்தது. பின்னர் அபகரிக்கப்பட்ட காணிகளில் 28500 ஏக்கர் காணியில் வெலிஓயா என்று மணலாறு என்ற தொன்மை மிகு தமிழ்ப்பெயரையே சிங்களப் பெயராக மாற்றிய சிங்களக் குடியேற்றத்தை நிறுவி இன்று அந்த வெலிஓயா என்று சிறிலங்காவின் படைபல ஆக்கிரமிப்புக் குடியேற்றத்திற்கு மேலும் மேலும் காணிகளை இணைக்கும் ஆக்கிரமிப்பைச் சிறிலங்காவின் இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான சிங்கள பௌத்த அரசாங்கம் செய்து 2009க்குப் பின்னர் கிட்டத்தட்ட இரண்டு இலட்சத்துப் பத்தாயிரம் ஏக்கர் காணிகளை அபகரித்து அதனைச் சிங்களவர்களுக்கான தனியார் நிரந்தரக் குடியேற்றக் காணிகளாக இன்று காணி உறுதிப்பத்திரத்தை அங்கு குடியமர்த்தப்பட்ட சிங்களவர்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. நீர்நிலைகளுடன் சேர்ந்த வளமான நந்திக்கடல் அருகில் உள்ள 69401 ஏக்கர் நிலத்தில் 29401 ஏக்கர் நிலம் இன்று வனத்துறையினால் தமதாகப் புதிதாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. மேலும் பறவைகள் சரணாலயம் என்ற பெயரில் இரணைப்பாலை, செம்மண்குன்று, அம்பலவன், பொக்கணை, மத்தளன், வலயர்மடம், முள்ளிவாய்க்கால் பகுதிகளில் 600 ஏக்கர் மக்களின் விவசாயக் காணிகள் வனத்துறையால் அபகரிக்கப்பட்டுள்ளது. இந்தப் புள்ளிவிபரங்களை வெளிப்படுத்தியுள்ள முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்கள் இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டமே சிறிலங்காவால் சிங்கள மயப்படுத்தப்பட்டு ஈழத்தமிழர்கள் ஒடுக்கப்படுகையில் அங்கு வாழும் ஈழத்தமிழ் மக்கள் எங்கு செல்வது என்ற நியாயமான கேள்வியை முள்ளிவாய்க்கால் இனஅழிப்பு மாதமான மே மாதத்தை உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்கள் நினைவேந்தல் செய்ய ஆயத்தமாகுகின்ற நேரத்தில் எழுப்பியுள்ளார்.

மேலும் கடந்தவாரம் 24ம் திகதி சிறிலங்காவுக்கு உமாஓயாப் பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தைத் தொடக்கி வைக்க சிறிலங்காவுக்கு வருகைதந்த ஈரானின் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் வருகையும் உறுதி செய்துள்ளது. ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி தனது உரையில் "நமது இருநாடுகளுக்கும் ஆசிய பிராந்திய நாடுகளுக்கும் இடையே அதிகபட்ச ஒத்துழைப்பு, ஒருங்கிணைப்பு, நல்லிணக்கம், மற்றும் ஒற்றுமை என்பவற்றை உறுதி செய்வதே இங்கு முக்கியமான விடயம் என்று நான் நம்புகின்றேன். மேலும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதை விட நமது இருநாடுகளுக்கும் இடையில் உள்ள மக்களின் விருப்பமும் உறுதியும் முக்கியமானது என்றே கூறவேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா அவர்களே ஈரான் இஸ்லாமியக் குடியரசிடம் உள்ள நவீன தொழில்நுட்ப அறிவை சிறிலங்காவுடன் பகிர்ந்து கொள்ளத் தயாராகவுள்ளோம். மேலும் சிறிலங்காவுடன் சிறந்த பங்காளித்துவத்துடன் முன்னேறிச் செல்ல ஈரான் தயாராக இருப்பதை நான் உறுதியளிக்கின்றேன்" என வெளிப்படையாகவே பேசி ஈரானின் இறைமைக்குச் சிறிலங்கா பங்காளியாகவும் சிறிலங்காவின் இறைமைக்கு ஈரான் பங்காளியாகவும் பயணிக்கும் என்பதை இஸ்ரேயலுக்கு ஆதரவாக உள்ள அமெரிக்காவுக்கும் மேற்குலக அணிக்கும் உறுதிப்படுத்தியுள்ளார். இந்நிலையில் சிறிலங்கா ஈரான் உடன் ஐந்து உடன்படிக்கைளைச் செய்துள்ளமையும் சிறிலங்கா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா நாம் அனைவரும் உலகளாவிய தெற்கு நாடுகள் என எங்கள் அடையாளத்தையும் சுதந்திரதிதையும் நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் இத்தகைய பங்காளித் திட்டங்கள் முக்கியம் எனப் பகிரங்கமாகவே அறிவித்துச் சிறிலங்காவை இந்தியத்துணைக்கண்டத்தின் தொடர்நிலப்பரப்பு என்னும் புவியியல் தன்மையில் இருந்தும் இலங்கைத் தீவில் உள்ள அனைத்து மக்களுடனும் இந்தியா பண்பாட்டு-வர்த்தக-வரலாற்றுத் தொன்மையும் தொடர்ச்சியும் கொண்ட தொகுதி என்ற இயல்புத் தன்மையில் இருந்தும் விலத்தி உலகின் தெற்கு நாடுகளுடன் அடையாளப்படுத்தியுள்ளமை சிறிலங்காவின் இந்திய விலகல் அரசியல் நிலைப்பாடடை உறுதிப்படுத்தியுள்ளது.

இருப்பினும் இந்தியாவோ தானும் நாலு பில்லியன் நிதி உதவியளித்தும் அனைத்துலக நாணயநிதியத்துக்கும் உலக வங்கிக்கும் வெளிப்படையாகவே சிறிலங்காவுக்குக் கடன் கொடுக்கப் பரிந்துரையளித்தும் சிறிலங்கா சீனாவிடம் கடன் பெறுவதை மட்டுப்படுத்தும் தந்திரோபாயத்தை முன்னெடுத்து வருகிறது. ஆயினும் சிறிலங்கா சீனாவுடனான தனது நட்பை மேலும் மேலும் ஆழப்படுத்தி வருவதுதான் நடைமுறை எதார்த்தமாக உள்ளது. சீனாவின் வெளிநாட்டுக் கொள்கை வகுப்பினைச் செய்யும் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் அனைத்துலக விவகாரங்களின் திணைக்களத்தின் பிரதிநிதியும், அமைச்சருமான ஷன்கயன் அவர்கள் சிறிலங்காவுக்கு வருகை தந்து ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவரை மட்டுமல்ல தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசநாயக்காவையும் சந்தித்து சிறிலங்காவின் உள்நாட்டு வெளிநாட்டு செல்நெறிகள் சீனாவால் தொடர்ந்து மேலாண்மை செய்யப்படுமென்பதை இந்தியாவுக்கும் அமெரிக்கா உட்பட்ட மேற்குலகநாடுகளுக்கும் உறுதிப்படுத்தியுள்ளார். அத்துடன் இதுவரை யாருமே சிறிலங்காவில் முதலிடாத மிகப்பெரிய முதலீடான 4.5 பில்லியன் டொலரை சினோபெக்கின் எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத் திட்டத்தில் முதலிடவுள்ளது.

இந்த மாற்றங்களின் எதிரொலியாக உலகநாடுகளில் மனித உரிமைகள் குறித்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள 2023ம் ஆண்டுக்கான அறிக்கையில் 1983 முதல் 2009 வரையான காலங்களிலும் அதேபோல் ஜே வி பி கிளர்ச்சிக்காலமான 1988-1989 இலும் மனித உரிமைகள் வன்முறைப்படுத்தப்பட்டது தொடர்பான விசாரணைகளில் சிறிதளவு முன்னேற்றமும் ஏற்படவில்லையெனத் தெரிவித்துள்ளது. இது அமெரிக்கா ஈழத்தமிழர்களைச் சிறிலங்காவின் ஒரு சமுகமாகப் பார்த்து அவர்களின் வரலாற்று இருப்பான தேசமக்கள் என்பதை மாற்றியமைத்து வருவதையும் இந்தியா தொடர்ந்தும் இலங்கையில் தமிழர்களின் கண்ணியமான வாழ்வினை உறுதிப்படுத்தல் என்கிற தனது கொள்கையுடன் கூடிய சிறிலங்காவுக்கான முதலீடுகள் கடன்கள் நிதிஉதவிகள் வழி ஈழத்தமிழர்களின் இறைமையைத் தொடர்ந்தும் மறுத்து வருவதையும் ஈழத்தமிழர்கள் உணர வேண்டிய நேரம் என்பதை இலக்கு இவ்வாரத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறது. இந்த அடிப்படை அரசியல் சிந்தனைகளில் புலம்பெயர் தமிழர்கள் மாற்றத்தைக் கொண்டுவர ஒன்று சேர்ந்து உழைக்காவிட்டால் அமெரிக்கா இஸ்ரேயலுக்கும் உக்ரேனுக்கும் தைவானுக்கும் ஆயுதவழங்கலுக்கான நிதியினை வெளிப்படையாகவே வழங்கியும் பிரித்தானியா தனது பாதுகாப்புச் செலவினத்துக்கான தொகையை 2.5 ஆக உயர்த்தியும் மூன்றாவது யுத்த உலகில் அடியெடுத்து வைத்து வரும் சூழலில் ஈழத்தமிழர்கள் நிலமும் இறைமையும் இருப்பும் இழக்கப்படும் பேரபாயம் ஏற்படும் என்பதையும் இலக்கு ஈழத்தமிழர்களுக்கு எச்சரிப்பாக எடுத்துரைக்க விரும்புகிறது.

**ஆசிரியர்**



# தமிழரசுக் கட்சிக்கு எதிராக ஏன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது



“எனக் கெதிராக தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் என்மீது சேறு பூசும் நடவடிக்கையாகும். எதிர் மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அவர்கள், என எழுதப்பட்ட கடிதம் காரணமாகவே இலங்கை தமிழரசுக் கட்சிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்ற வாதத்தை நான் மறுதலிக்கிறேன். ஜனவரி மாதம் 27 ஆம் திகதி இடம் பெற்ற கட்சியின் உறுப்பினர்களுக்கான தெரிவு யாப்பு விதிகளுக்கு ஏற்ப நடைபெற்றுள்ளது. எனவே மாநாட்டை உரிய தினத்தில் நடத்தும்படி புதிதாக தெரிவு செய்யப்பட்ட தலைவருக்கு அறிவித்த விடயம் கட்சியின் பொறுப்பு வாய்ந்த உறுப்பினர் என்ற வகையில் புதிய தலைவருக்கு கூறப்பட்ட ஆலோசனையாகும். இதனால் கட்சிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்ற விடயம் என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது” என ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் திருகோணமலை மாவட்ட நீதி மன்றில் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதி மற்றும் 28 ஆம் திகதி திருகோணமலையில் இடம் பெற்ற இலங்கை தமிழரசுக்கட்சியின் பொதுச்சபை உறுப்பினர்களான தலைவர் தெரிவு மற்றும் செயலாளர் உட்பட்ட நிர்வாகிகள் தெரிவு பொதுச் சபைக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட 14 மேலதிக உறுப்பினர் தெரிவு கட்சி யாப்புக்கு முரணானது எனவே அவற்றை இரத்து செய்யவேண்டுமென கடந்த பெப்ரவரி மாதம் உறுப்பினர் பரா சந்திரசேகரம் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணை நேற்றைய தினம் திருகோணமலை மாவட்ட நீதி மன்றில் நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது 6 எதிர் மனுதாரரான சுமந்திரன் எழுதிய கடிதம் தொடர்பாகவே வழக்கு திட்ட மிட்ட முறையில் மனு தாரரான பரா என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டை எதிர் மனுதாரர்கள் சார்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி கூறியபோதே சட்டத்தரணி சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதி சட்டத்தரணி தவராஜா நீதி மன்றில் எதிர் மனுதாரர் சார்பில் கருத்துக்களை முன்வைக்கையில் வழக்கு தாக்கல் செய்த பரா என்பவரின் கோரிக்கைகளான ஜனவரி 21 ஆம் திகதி 27 ஆம் திகதி இடம் பெற்ற தெரிவுகள் கட்சியின் யாப்புவிதிகளுக்கு முரணானது என்பதை 6 எதிர் மனுதாரர் தவிர்ந்த ஏனையோர்கள் ஏற்றுக்கொள்வதுடன் பொதுச்சபைக்கு மேலதி கமாக தெரிவு செய்யப்பட்ட 14 உறுப்பினர்களின் நியமனங்களும் தவறானது என்பதை ஏற்றுக் கொண்டு மனுதாரரின் கோரிக்கைக்கு அமைய நிவாரணங்களை



திருமலை நவம்

நாங்கள் வழங்க தயாராக இருக்கிறோம் என்பதை இந்த மன்றுக்கு தாழ்மையுடன் தெரிவித்து கட்சியின் நன்மை கருதியும் சமூக நலன்கருதியும் விசாரணைக்கு செல்லாமல் வழக்கை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்பதை கோருவதுடன் 6 ஆம் எதிர் மனுதாரரான சட்டத்தரணி சுமந்திரன் ஜனவரி மாதம் 27 ஆம் திகதி இடம் பெற்ற தெரிவு தொடர்பாக கட்சி யாப்புக்கு அமைய அத் தெரிவுகள் இடம் பெற்றுள்ளது. எனவே அதில் பிழை நடக்கவில்லை என்றும் குறித்த தினத்தில் கட்சியின் மாநாட்டை நடத்தும் படி புதிதாக தெரிவு செய்யப்பட்ட தலைவரான சிறிதரனுக்கு ஜனவரி 31 ஆம் திகதி எழுதிய கடிதத்தில் அது நடை பெறவில்லையாயின் வழக்குக்கு செல்வோம் என்று எச்சரித்து எழுதிய கடிதம் ஊடகங்களில் வெளிவந்து சுமார் 15 நாட்கள் ஆகவில்லை திருகோணமலையிலும் யாழ்ப்பாணத்திலும் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது. இது திட்ட மிட்ட செயல் மாத்திர மன்றி வழக்கை இழுத்தடிக்கும் நோக்கமென மன்றில் எடுத்துக் கூறிய வேளையில்தான் அதற்கு பதில் அளித்த சுமந்திரன் இது திட்டமிட்டு தனக்கு சேறு பூசும் குற்றச்சாட்டுக்கள் என்றும் எதிர் மனுதாரர்கள் ஏனையவர்கள் உடன் பட்டுள்ளார்கள் என்பதற்காக மனுதாரர் கோரும் அனைத்து கோரிக்கைகளையும் தருவோம் என்று கூறுவதும் வழக்கை முடிக்கவேண்டும் என்பதற்காக தவறான முடிவுக்கு வருவதை தான் ஏற்றுக் கொள்ள முடியாது என தெரிவித்தார். அது மட்டுமன்றி தவறான முடிவுக்கு கட்சிவருமாக இருந்தால் அது தொடர்பாக வழக்கு தொடருவேன் என பகிரங்கமாக அறிவித்த பீற்றர் இளஞ் செழியனும் இந்த மன்றில் பிரசன்னமாகி இருக்கிறார் என்று சுமந்திரன் தெரிவித்தபோது இவ்வேளையில் இடை மறித்த சட்டத் தரணி தவராஜாவுக்கும் சட்டத்தரணி சுமந்திரனுக்கு மடையில் கடுமையான தர்க்கிப்பு இடம் பெற்றது உட்காருங்கள் வெளியே போங்கள் என்ற கடுமையான சொற்பிரயோகங்கள் இடம் பெற்றது . இறுதியில் இருபக்ககத்தாரும் ஒரு உடன்பாட்டுக்கு வரும் முகமாக எதிர்வரும் மே 31 ஆம் திகதி வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்கும் போது நீதி மன்றை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் புதிய சுதந்திரன் ஆசிரியர் முத்துக்குமாரு அகிலன் அழைப்பணைக்கு ஏற்ப இன்று நீதி மன்றம் வராதபோதும் அவருக்காக ஆஜராகியிருந்த சட்டத்தரணி அவரை இவ்வழக்கின் ஒரு இடை மனுதாரராக இணைக்கும் படி மன்றை கோரியபோது சட்டத்தரணி சுமந்திரன் அழைப் பணையை ஏற்றுக் கொண்டு மன்றுக்கு வராத மற்றும் நீதி மன்றை அவமதித்த ஒருவரை இடைபுகு மனுதாரராக சோக்க முடியாது என விவாதித்தார்.

• • •

# புதிய சுதந்திரன் ஆசிரியர்

## முத்துக்குமாரு அகிலனுக்கு பிடியாணை

புதிய சுதந்திரன் ஆசிரியர் முத்துக்குமாரு அகிலன் அவர்களுக்கு நீதிமன்றை அவமதித் தார் என்ற குற்றசாட்டில் திருகோணமலை மாவட்ட நீதி மன்றினால் பிடியாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

நேற்றைய தினம் திருகோணமலை மாவட்ட நீதி மன்றத்தின் நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் இலங்கை தமிழரசுக்கட்சி தெரிவு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டிருந்த விசாரணை இடம் பெற்றபோது தன்மீது அழுத் தத்தை பிரயோகிக்கும் வகையில் புதிய சுதந்திரன் இலத்திரன் பத்திரிகையின் ஆசிரியர் அகில குமாரன் முத்துக்குமாரசாமி மீது கடந்த ஏப்ரல் 5 ஆம் திகதி நீதி மன்றில் ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப் பினருமாகிய எம். ஏ சுமந்தரன் குற்றமொன்றை முன்வைத்து அவரை அழைத்து விசாரணை நடத்தவேண்டுமென மன்றை கோரியதற்கு அமைய நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அழைப்பாணையை அனுப்ப உத்தரவிட்டிருந்தார்.

குறித்த பத்திரிகை ஆசிரியர் அழைப்பாணையை ஏற்று இன்று மன்றுக்கு சமூகமளிக்க தவறியதை சுட்டிக்காட்டி சட்டத்தரணி சுமந்திரன் அவருக்கு பிடியாணை பிறப்பிக்கும்படி நீதி மன்றை கோரியதற்கு அமைய நீதி மன்றை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டுக்கு அமைய புதிய சுதந்திரன் அசிரியருக்கு திருகோணமலை நீதி மன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புதிய சுதந்திரன் பத்திரிகை யின் ஆசிரியர் அகிலகுமாரன் சார்பில் ஆஜராகிய சட்டத்தரணி பத்தரிகை ஆசிரியரை இவ்வழக்கில் இடைபுகு மனுதாரராக சோத்துக் கொள்ளவேண்டு மென கோரியபோது அதற்கு எதிர்ப்பு தெரிவித்த சட்டத்தரணி சுமந்திரன் குறித்த நபர் நீதி மன்றை அவமதிக்கும் வகையில் அழைப்பாணைக்கு வருகை தரவில்லை. அதுவுமன்றி அவர் தமிழரசுக்கட்சியின் உறுப்பினருமல்லர். எனவே அவரை இடைபுகு மனுதாரராக ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை மன்று தெரிவிக்கவேண்டுமென கோரியிருந்தார் இந்நிலையில் ஜனாதிபதி சட்டத்தரணியும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய சுமந்திரனின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதி மன்றம் புதிய சுதந்திரன் ஆசிரியருக்கு பிடியாணை பிறப்பிக்க கட்டளை பிறப்பித்துள்ளது.

• • •

# இலங்கை வந்த ஈரான் அதிபர்!

## ரணில் வகுத்திருந்த திட்டங்கள்

அகிலன்

மத்திய கிழக்கில் ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலானபரஸ்பரதாக்குதல்கள் உலகை அதிரவைத்துக் கொண்டிருந்த பின்னணியில்தான் ஈரான் அதிபர் கலாநிதி இப்ராஹிம் ரைசி இலங்கை வந்தார். அவரது இந்த விஜயம் இறுதிவரையில் கேள்விக்குறியாகத்தான் இருந்தது. போர் ஒன்றில் யாராலும் வெல்லமுடியாத நாடு எனக் கருதப்படும் இஸ்ரேல் மீது அதிரடித் தாக்குதலை நடத்தியதன் மூலம், சர்வதேசத்தின் கவனம் இப்ராஹிம் ரைசி மீது திரும்பியிருந்தது. அமெரிக்கா, இஸ்ரேல் ஆகியவற்றின் முதலாவது எதிரியாக அவர் மாறியிருந்தார். இதனால், அவரது ஒவ்வொரு நகர்வும் அவதானிக்கப்படுகிறது. போர் பதற்ற நிலை தீவிரமடைந்திருந்த நிலையில்தான் அவர் இலங்கை வருவாரா என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

ஈரானின் போர் நகர்வுகளின் பின்னணியில் பிரதான நபராக இப்ராஹிம் ரைசி இருக்கிறார் என்பது இரகசியமானதல்ல. அதனால் அவரது பயணங்களும் இலகுவானதாக இருக்காது, ஆபத்துக்கள் நிறைந்ததாக இருக்கும் என்பதும் எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனாலும், பாகிஸ்தானுக்கும், இலங்கைக்கும் கடந்த வார விஜயத்தை திட்டமிட்ட படி முன்னெடுத்தார். எந்தச் சவாலையும் எதிர்கொள்ளும் திராணி தனக்கு இருக்கிறது என்பதை இதன் மூலம் அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

அமெரிக்காவும், இந்தியாவும் அவரது வருகைக்கு இராஜதந்திர ரீதயாக எதிர்ப்பை வெளியிட்டதாக செய்திகள் வந்தன. ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டிருக்கும் ரணில் அதனை எதிர்கொண்டு இப்ராஹிம் ரைசியை வரவேற்றார். இராஜதந்திர ரீதியாகவும், பாதுகாப்பு ரீதியாகவும் இந்த விஜயம் றிஸ்க்கானது என்பது ரணிலுக்குத் தெரிந்தே இருந்தது. ஆனால், இந்த விஜயத்தின் மூலம் ரணில் எதிர்பார்த்த பலன்கள் அவற்றைவிட முக்கியமானது.

### பாதுகாப்பு அணிகள்

இப்ராஹிம் ரைசியின் அவரது வருகைக்கு சில வாரங்களுக்கு முன்னதாகவே அவரது விஷேட பாதுகாப்பு அணிகள் இலங்கை வந்திருந்தன. அவர் வந்திறங்கிய மத்தள விமான நிலையம் உட்பட, அவர் பயணம் செய்யும் பாதைகள் அனைத்துமே கவனமாகப் பரிசோதிக்கப்பட்டன.



மத்தளவிலிருந்து உமா ஓயா திட்டத்தை திறந்து வைப்பதற்காக மலைப்பாதைகள் ஊடாக பதுளைக்கு அவர் செல்ல வேண்டியிருந்தது. இந்தப் பயணத்துக்கு ஹெலிக்கொப்டர் ஏற்பாடு செய்யலாம் என இலங்கை தரப்பு ஆலோசனை முன்வைத்தது. ஆனால், ஈரான் அதிகாரிகள் அதனை நிராகரித்து தரைப் பாதையைத்தான் தெரிவு செய்தார்கள் என்று சொல்லப்படுகின்றது.



கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு ஈரான் அதிபர் மேற்கொண்ட இந்த விஜயம், பொருளாதார ரீதியாக மட்டுமன்றி அரசியல் இராஜதந்திர ரீதியாகவும் முக்கியமானது. தனித்துவமான “எண்ணெய்க்கான தேயிலை” ஒப்பந்தத்தால் குறிக்கப்பட்ட இந்த விஜயம், அதன் சாத்தியமான அரசியல் தாக்கங்கள் பற்றிய விவாதங்களைத் தூண்டியுள்ளது. வெளித்தோற்றத்தில் ஒரு பொருளாதார பரிமாற்றம் என்றாலும், வருகை உடனடி ஆதாயங்களுக்கு அப்பால் பல சர்வதேச பரிமாணங்களைக் கொண்டுள்ளது.

வெளிநாட்டு கையிருப்பு குறைதல், சர்வதேசக் கடன்களின் அதிகரிப்பு மற்றும் தவறான பொருளாதார முகாமைத்துவம் போன்ற காரணிகளின் கலவையால் உருவாகிய இலங்கையின் பொருளாதார நெருக்கடி, மலிவு விலையில் எண்ணெய்க்கான அவசரத் தேவையை இலங்கைக்கு உருவாக்கியுள்ளது. இதற்கு இலங்கைக்கு கைகொடுத்த முக்கிய நாடுகளில் ஈரான் பிரதானமானது.

பாரம்பரியமாக, எரிபொருள் இறக்குமதிக்காக இலங்கை இந்தியாவை நம்பியிருந்தது. இருப்பினும், உலகளாவிய எண்ணெய் விலை உயர்ந்து வருவதால், ஈரானின் சலுகை கவர்ச்சிகரமானதாக மாறியது. “எண்ணெய்க்கான தேயிலை” ஒப்பந்தமானது, ஈரானுடனானகடனைத் தீர்ப்பதற்கும் எதிர்கால எண்ணெய் இறக்குமதியைப் பாதுகாப்பதற்கும் இலங்கைக்கு அதன் மிக மதிப்புமிக்க ஏற்றுமதியான தேயிலையை பண்டமாற்று செய்ய அனுமதிக்கிறது.

இந்த விஜயம் இரு நாடுகளின் மூலோபாய நகர்வை வெளிப்படுத்துகின்றது. அணுசக்தித் திட்டத் தடைகள் காரணமாக சர்வதேச அளவில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் ஈரானுக்கு, புதிய பொருளாதாரக் கூட்டாண்மைகளை உருவாக்க இது ஒரு வாய்ப்பாகும். இலங்கை, தனது வர்த்தக உறவுகளை பன்முகப்படுத்த முயல்கிறது, ஈரானை ஒரு நீண்ட கால ஆற்றல் வழங்குனராக பார்க்கிறது. மேலும், இந்த விஜயமானது வரலாற்று ரீதியாக இலங்கைக்கு குறிப்பிடத்தக்க உதவிகளை வழங்கும் ஒரு தேசத்துடனான உறவுகளை வலுப்படுத்தும் நோக்கத்தையும் கொண்டுள்ளது.

### குறைந்த விலையில்..

அமெரிக்கா, இந்தியா போன்றவற்றின் அழுத்தங்கள் இஸ்ரேலினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கு மத்தியிலும் தன்னை வரவேற்ற ரணில் துணிந்தது ஈரான் அதிபருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கின்றது. அதற்கும் மேலாக இந்தப் பிராந்தியத்தில் உள்ள ஒரு நாட்டனான உறவைப் பலப்படுத்திக்கொண்டமையும் இன்றைய போர்ச் சூழலில் இப்ராஹிம் ரைசிக்கு அவசியமான ஒன்றாகவே இருந்தது. பாகிஸ்தானின் நிலைதான் இலங்கைக்கும் ஏற்படலாம் என உள்நாட்டில் அரசியல் சக்திகள் தெரிவித்த நிலையில் இப்ராஹிம் ரைசியை வரவேற்க ரணில் தீர்மானித்தமைக்கு சில காரணங்கள் இருந்தன.

இப்ராஹிம் ரைசியுடனான பேச்சுக்களின் போது, சர்வதச சந்தை விலையை விட குறைந்த விலையில் எண்ணையை வழங்க ஈரான் அதிபர் சம்மதித்ததாகத் தெரிகின்றது. இதன் மூலம் இன்னும் சில வாரங்களுக்குள் உள்ளூர் சந்தையில் எரிபொருள் விலை குறையலாம். அதன் விளைவாக அத்தியவசியப் பொருட்கள் பலவற்றின் விலைகளும் குறைவடையும். ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடுவதை அறிவிப்பதற்கு அது அவருக்குப் பொருத்தமான தருணமாக அமையும். ஈரானும் இவ்விடயத்தில் ரணிலுக்கு உதவும் மனப்பான்மையுடன்தான் உள்ளது.

இலங்கையின் நெருங்கிய பிராந்திய பங்காளியான இந்தியா, இந்த நகர்வுகளை கவலையுடன் பார்க்கக்கூடும். இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையில் இந்தியா நீண்டகாலமாக ஒரு மேலாதிக்க நிலையைக் கொண்டுள்ளது. பலப்படுத்தப்படும் இலங்கை - ஈரான் உறவு இந்த நிலையைச் சிக்கலாக்கும். இந்தியா மற்றும் ஈரான் ஆகிய இரு நாடுகளுடனும் நல்லுறவைப் பேண முயற்சிப்பதன் மூலம் இலங்கை எச்சரிக்கையுடன் நடந்துகொள்கின்றது.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் மிகுந்த இராஜதந்திரத்துடனும், மதிநுட்பத்துடனும் நடந்துகொள்கின்றார். இந்தியா விரும்பாத ஒன்றைச் செய்யும் அதேவேளையில், இந்தியாவின் தேவைகள் சிலவற்றையும் செய்வதற்கான சமிஞையைக் கொடுக்கின்றார். இவ்வாறான நகர்வுகளின் மூலம் புதுடில்லியை அவரால் சமாதானப்படுத்த முடிகின்றது.

இலங்கை அரசியலில் பல ஆண்டுகளாக ஆதிக்கம் செலுத்திய ராஜபக்ஷ குடும்பம், 2022ஆம் ஆண்டு நடந்த அரகலய என்ற மக்கள் போராட்டங்கள் காரணமாக அதிகாரத்திலிருந்து வெளியேற்றப்பட்டது. பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ஷ பதவியைத் துறந்தார். ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ நாட்டைவிட்டுத் தப்பிச் சென்றார்.

இருப்பினும், பாராளுமன்றத்தில் அவர்களுடைய கட்சி பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருப்பதால், அவர்களின் செல்வாக்கு குறிப்பிடத்தக்கதாக உள்ளது. அதேவேளையில் சிங்களப் பகுதிகளில் அவர்களுடைய கட்சியின் கட்டமைப்புக்களும் ஓரளவுக்குச் செயற்பட்டுக்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்



# பொறுத்திருக்கக் கேட்பவர்கள் “டீல்” போட காத்திருப்பவர்கள்

## ஆய்வாளர் நிலாந்தன் செவ்வி

**ஜனாதிபதித் தேர்தலுக்கான பரபரப்பில் கொழும்பு அரசியல் உள்ள நிலையில், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விவகாரம் தமிழர் தரப்பின் பேசுபொருளாகியிருக்கின்றது. இந்த நிலையில் இது தொடர்பாக அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம் இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

**பொது வேட்பாளர் என்ற எண்ணக் கரு இம்முறை அதிகளவுக்கு முக்கியத்துவம் பெறுவதற்கு என்ன காரணம்?**

பொது வேட்பாளர் என்ற எண்ணக் கரு இரு நிலைகளில் தமிழர் தரப்பில் முன்னிலைக்கு வந்தது. ஒன்று - கடந்த காலங்களில் குமார் பொன்னம்பலம், சிவாஜிலிங்கம் ஆகிய இருவரும் தமிழ் வேட்பாளர்களாக ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்டிருந்தார்கள். அவர்கள் பொது வேட்பாளர்கள் அல்ல. தமிழ் வேட்பாளர்கள். பொது வேட்பாளர் என்பவர் தமிழ்ப் பொதுக் கருத்தைப் பிரதிபலிப்பவராகவும், தமிழ் மக்களின் கூட்டு உளவியலைப் பிரதிபலிக்கும் ஒருவராகவும்தான் கருதப்படுகின்றார். அந்த வகையில் பார்க்கும் போது “தமிழ்ப் பொதுவேட்பாளர்” என்பவர் தமிழ்த் தேசிய ஐக்கியத்தை குறியீடாகக் காட்டும் ஒருவராக இருக்க வேண்டும். அவர் தமிழ் மக்களை ஆகக்கூடிய பட்சம் ஒன்றிணைப்பார். தமிழ் பொது வேட்பாளர் என்ற கருத்துருவம் தமிழ் ஐக்கியம்தான்.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது மு.திருநாக்கரசு இந்தக் கருத்தை முன்வைத்தவர். அப்போது அவர் அதில் ஒரு பேரம்பேசலுக்கான வாய்ப்பு குறித்தும் பேசியிருந்தார். 2015 ஆம் ஆண்டுத் தேர்தலிலும் அவர் அதனை எழுதியிருந்தார். 2019 இல் தமிழ் மக்கள் பேரவை சார்பில் அமைக்கப்பட்ட சுயாதீனக்குழு ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது என முடிவெடுத்தது. ஆனால், அந்த முயற்சியில் எல்லாத் தலைவர்களையும் நாம் சந்தித்தோம். பொதுவேட்பாளருக்கான சில பெயர்களும் பரிசீலிக்கப்பட்டன. ஆனால், பிரதான ஒரு கட்சியாக இருந்த தமிழரசுக் கட்சி அதில் தெளிவான ஒரு நிலைப்பாட்டை எடுக்கவில்லை. மறைமுகமாக அதற்கு எதிராகக் காணப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அப்போதும் பகிஷ்கரிப்பு என்ற நிலைப்பாட்டில்தான் இருந்தது. கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளிடமும் ஒரு துலக்கமான முடிவு இருக்கவில்லை. விக்னேஸ்வரன் ஆதரித்தார்.

இந்தப் பின்னணியில் ஒரு கட்டத்துக்கு அதனை செயலுருப்படுத்தக்கூடிய ஒரு சக்தி தமிழ் மக்கள் பேரவைக்கு இருக்கவில்லை. அதனால், அந்த விடயம் அப்படியே விடுபட்டுவிட்டது.

பின்னர் இந்த முறை இது தொடர்பில் பேசத் தொடங்கியவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்தான். அவருக்குப் பின்னர் இப்போது வெவ்வேறு தரப்புக்கள் முன்னெடுக்கின்றன. மக்கள் மனு என்ற சிவில் அமைப்பு இதனை முன்னெடுக்கின்றது. இது குறித்து இரண்டு கருந்தரங்குகளை வடக்கிலும் கிழக்கிலும் நடத்தியிருக்கின்றது.

இப்போது சிவில் அமைப்புக்கள் இவ்வாறு ஒரு தமிழ் பொதுவேட்பாளரை தேர்தல் களத்தில் இறக்குவதற்கான ஒரு கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக ஆராய்ந்துவருகின்றன.

**தமிழ்க் கட்சிகள் பலவும் பொது வேட்பாளர் என்ற விடயத்தில் இணங்கிச் செயற்பட்டுவருகின்றார்கள். ஆனால், இந்தக் கட்சிகள் அனைத்தும் இந்த இலக்கில் பற்றுதியுடன் இறுதிவரையில் செயற்படுவார்கள் என நினைக்கின்றீர்களா?**

ஒரு அரசியல் இலக்கை நோக்கி எல்லோரும் ஒரேவிதமான பற்றுறுதியுடனும், விசுவாசத்துடனும் இயங்குவார்கள் என எதிர்பார்க்கத் தேவையில்லை. சிலர் முழு விசுவாசமாக இருப்பார்கள். சிலர் அரை விசுவாசமாக இருப்பார்கள். சிலர் அதனை ஒரு டீலாகக்கூட முன்னெடுக்க முடியும். அரசியலில் இவ்வாறு பல்வகையான போக்குகள் இருக்கும். அதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். சுரேஷ் பிரேமச்சந்திரனைப் பொறுத்தவரையில் இதனை ஒரு பேர வாய்ப்பாகப் பயன்படுத்தலாம் என்ற கருத்து இருந்தது. மக்கள் மனு அவ்வாறான பேர வாய்ப்பு குறித்து உரையாடவில்லை. அதனை அவர்கள் தமிழர் ஐக்கியத்தைப் பிரதிபலிக்கும் என்ற வகையில் கோட்பாட்டு ரீதியாகத்தான் உரையாடிவருகின்றார்கள்.

சிவில் சமூகங்கள் இதனை இப்போது அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்ல முற்படுகின்றன. அவர்கள் இதில் தெளிவாக இருக்கின்றார்கள். தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுபவர் முதலாவது தமிழ் ஐக்கியத்தின் குறியீடாக இருப்பார். தமிழ் மக்களை பல்வேறு வேறுபாடுகளுக்கும் அப்பால் ஒரு தேசமாக ஒன்றிணைப்பார். தமிழ்க் கூட்டு உளவியலை அவர் பிரதிபலிப்பார்.

இதுவரை காலமும் தமிழ் மக்களுடைய வாக்குகள் வெற்றுக் காசோலைகள் போல யாரோ ஒரு சிங்கள வேட்பாளருக்குத்தான் போயிருக்கின்றது. அதிலும் குறிப்பாக கடந்த 3 ஜனாதிபதித் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் ஒரு விடயத்தில் ஒன்றாக நின்றிருக்கின்றார்கள். அதாவது ராஜபக்ஷக்களுக்கு எதிராக வாக்களிப்பது என்ற விடயத்தில் அவர்கள் ஒன்றாக நின்றுள்ளார்கள். ராஜபக்ஷக்களுக்கு எதிராக என்று சொல்லிக்கொண்டு தமிழ் வாக்குகள் யாரோ ஒரு சிங்கள வேட்பாளருக்கு வெற்றுக்காசோலைகளாகச் சென்றுகொண்டிருக்கின்றது. இந்த வெற்றுக்காசோலையை அர்த்தமுள்ளதாக மாற்றலாம். எவ்வாறென்றால் - தமிழ்க் கூட்டுணர்வைப் பிரதிபலிக்கும் வாக்காக நாம் அதனை மாற்றலாம். அதாவது, தமிழ் மக்களின் கோரிக்கை என்ன என்பதற்கான ஒரு பொதுஜன

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# யாழ் தொடக்கம் வாகரை வரையான போராட்டம்

## அனைவரும் ஒன்றிணையவேண்டும்

மட்டு.நகரான்

தமிழர்களின் இருப்பினை பாதுகாப்பதற்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். கிழக்கில் தமிழர்களின் இருப்பினை பாதுகாக்க வேண்டுமானால் போராட்டமே அதற்கான வழி என்ற நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.



கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தமிழர்களின் இருப்பு கேள்விக்குட்படுத்தப்பட்டுவரும் நிலையில் அங்கு தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. தமிழ் தேசிய அரசியலில் தமிழர்கள் கொண்டுள்ள பற்று அவர்களை போராட்ட நிலைக்கு கொண்டுசென்று தமது இருப்பினை பாதுகாப்பதற்கு உந்துதல் அளித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்த வரையில் இன்று பல பகுதிகள் போராட்டக்களமாகவே மாறிவருகின்றது.அதுவும் விடுதலைப்போராட்ட காலத்தில் தமிழர்களின் வீரம் செறிந்த ஆற்றல்களைக் கொண்டிருந்தவர்கள் ஆண்ட பகுதிகள் எல்லாம் இன்று தமது இருப்புக்காக போராடும் நிலைக்கு தமிழர்கள் தள்ளப்பட்டுவருகின்றனர்.

இன்று மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரைக்காணிக்காக 225நாட்களையும் தாண்டி பண்ணையாளர்கள் போராடிவரும் நிலையில் வாகரை பிரதேசத்தினை பாதுகாப்பதற்கு வாகரை மக்கள் போராட்டத்தில் குதித்திருக்கும் நிலையினையும் காணமுடிகின்றது.



மட்டக்களப்பு வாகரை பிரதேசம் என்பது தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தில் முக்கிய தளமாகவிருந்த பிரதேசமாகும். வடகிழக்கிற்கு இணைப்பு பாலமாகவிருந்து இக்கட்டான யுத்த காலத்தில் வடக்கிற்கு போராளிகளை அனுப்பிவைப்பதற்கான முக்கிய தள பகுதியாகயிருந்ததுடன் கிழக்கின் ஒரு கட்டளை மையமாகவும் இருந்துவந்தது.இன்று வாகரையில் நடக்கும் சம்பவங்களும் செயற்பாடுகளும் அங்கு தமிழர்களை அழிக்கும் நடவடிக்கையா என்ற சந்தேகத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது.

வாகரை பிரதேச செயலகப்பிரிவானது 589 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டதுடன் 16 கிராம சேவையாளர் பிரிவினைக்கொண்டது. வாகரைப் பிரதேச செயலகம் எனப்படும் கோறளைப்பற்றுவடக்குபிரிவானதுமட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்குப் பகுதியை உள்ளடக்கியது. இப்பிரிவு மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ளதுடன் அதன் எல்லைகளாக வடக்கில் வெருகல் ஆற்றையும் திருகோணமலை மாவட்டத்தையும், கிழக்கில் வங்காள விரிகுடா கடலையும், தெற்கில் கோறளைப்பற்று மத்தி பிரிவையும், மேற்கில் பொலன்னறுவை மாவட்டத்தையும் கொண்டுள்ளது.

அனைத்து வளங்களையும் இந்த பகுதி கொண்டிருக்கின்றபோதிலும் இங்குள்ள வளங்களை பயன்படுத்தி அப்பகுதி மக்களுக்கான தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு பதிலாக அப்பகுதி வளங்களை தென்னிலங்கையில் உள்ள பெரும்பான்மையினத்தவர்களுக்கு தாரை வார்த்துக்கொடுக்கும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

யுத்தம் முடிந்த பின்னர் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் காணிகள் தெற்கினை சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் இராணுவத்தினருக்கு வளமிக்க சுமார் 1500 ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டுள்ளன.



இவ்வாறான நிலையில் அண்மைக் காலமாக இல்மனைட் அகழுதல்,இரால் பண்ணை அமைத்தல் போன்ற திட்டங்களுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை கபளீகரம் செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் இல்மனைட் அகழ்வு செய்யப்படுமானால் வாகரை பிரதேசத்தின் பல பகுதிகள் அழியும் நிலைமையும் ஏற்படும் என வாகரை பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பல தடவை வாகரை பிரதேச செயலகத்திற்கு முன்பாக போராட்டம் நடத்திய மக்கள் மட்டக்களப்பு நகருக்கும் வருகைதந்து போராடவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தின் நிர்வாகத்தினை தாண்டியதாக இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

குறிப்பாக இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் சிறுபான்மை சமூகத்தினை அடக்கி ஒடுக்குவதற்கு பல்வேறு வழிகளை கையாண்டுவருகின்றனர். ஒரு பகுதியில் தங்களது ஆதிக்கத்தினை நிலைநிறுத்தவேண்டுமானால்அங்குபல்வேறுவழிகளை கையாண்டு வருகின்றனர். தங்களுக்கு ஆதரவானவர்களுக்கு தேவையானவற்றினை மேற்கொள்ளல், ஆசைகாட்டி தமது செயற்பாடுகளை முன்னெடுத்தல், கொள்ளையர்களை அரசியலுக்குள் கொண்டுவந்து தமது தேவைகளையும் செயற்பாடுகளையும் முன்னெடுத்தல் போன்ற பல்வேறு வழிகளை கையாண்டுவருகின்றது.

வாகரையில் இல்மனைட் அகழ்வு என்பது வாகரையின் கரையோரப்பகுதியை முற்றாக அழிக்கும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன. வாகரை பகுதியின் பெரும்பாலான பகுதிகள் கடற்கரையினை அண்டியுள்ளதால் அதனை நம்பி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்கின்றன. யுத்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பொருண்மிய துறையின் பெரும்பங்களை வாகரை கடற்பகுதியை பூர்த்தி செய்து வந்தது.இதன்மூலம் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரமும் விருத்தியடைந்ததுடன் பொருண்மியமும் வளர்ச்சிபெற்றது. யுத்தத்திற்கு பின்னர் குறித்த செயற்பாட்டினை பிள்ளையான் குழுவின் முக்கியஸ்தரான ஜெயம் என்பவர் பொறுப்பேற்று அதனை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுசெயற்பட்டதன் காரணமாக வாகரை மக்கள் தமது வாழ்வாதாரத்தினை கொண்டுசெல்லமுடியாத நிலையிருந்தது.எனினும் பின்னரான காலப்பகுதியில் தமிழ் தேசிய அரசியல் செயற்பாடுகள் காரணமாக அந்த நிலைமை தளர்ந்து வாகரை மக்கள் கடற்பகுதியில் தமது வாழ்வாதாரத்தினை கொண்டுசெல்லும் நிலையேற்பட்டது.




எனினும் தொடர்ச்சியாக வாகரை பகுதியில் தமது வாழ்வாதாரத்தினை கடலை நம்பியே வாகரையில் பெரும்பாலான மக்கள் வாழ்க்கையினை முன்னெடுத்துவரும் நிலையில் இன்று வெருகல் தொடக்கம் வாகரையின் காயன்குடா வரையான பெருமளவான கடற்பகுதியில் இல்மனைட் அகழ்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றது. இதற்காக தெற்கில் உள்ள நிறுவனம் ஒன்றிற்கு கடற்பகுதியை வழங்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.



இவ்வாறான செயற்பாடுகள் வாகரை பகுதிகளின் மக்கள் வாழ்வாதாரத்தில் மட்டுமல்ல அப்பகுதியையே அழிக்கும் நிலையுருவாகும் என

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# நிலக் கூட்டுரிமை கோரிக்கையை இல்லாது செய்வதற்கான உத்தி

## பலஸ்தீனமும் முள்ளிவாய்க்காலும்

**இறுதிப்பகுதி**

— எழில்

தமிழினப்படுகொலையின் இயக்கிகள், தமிழ்த் தேசியத்தின் மீதான நம்பிக்கையை இல்லாது ஒழிப்பதற்கான அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார்கள். அது ஓர் உளவியல் போர் ஈழத்தமிழினம் எதிர்கொள்வது மட்டுமல்ல, விடுதலைக் கிளர்ச்சியை அடக்குவதற்கான ஓர் உத்தியாகவும் பயன்படுத்தப்படுகின்றது.



தமிழினப்படுகொலை ஆய்வுமையத்தின் அவசியம் தமிழினப்படுகொலையும், பலஸ்தீனப் படுகொலையும், இனப்படுகொலை கற்கை திறனாய்வு வெளியில் ஆய்வுப் பரப்பை திறந்து விட்டுள்ளது. இனப்படுகொலைகளில் பொதுத் தன்மை இருந்தாலும் ஒவ்வொரு இனப்படு கொலையும்தனித்துவமானது. அந்ததனித்துவத்தை வெளிக்கொணர்தல் ஆய்வுகளுக்கூடாகத் முடியும் எனநம்பிக்கைகொண்டால், தமிழினப்படுகொலை ஆய்வுமையத்தின் அவசியம் வரலாற்றுத் தேவை யாகின்றது.

முள்ளிவாய்க்காலில் உச்சந்தொட்ட பேரவலம் இனப்படுகொலையா இல்லையா என்ற விவாதம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இனப்படுகொலைச் சாசனத்தின் வரைவுகளை சட்டரீதியாக அணுகுவோர் இந்த விவாதத்தின் கொதி நிலையை தக்கவைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துள் இருக்கின்றனர், காரணம் இனப்படுகொலை என்பது சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டால் தமிழினத்தின் தேசக் கோரிகையை ஏற்றுக்கொண்டதாகிவிடும், அதுவே சுயநிர்ணய உரிமைக்கும் வழிவகுத்து விடும். இனப்படுகொலை உள்நோக்கம் கொண்ட அரச கொள்கையோடு இன்னொரு இனம்-சமூகம் சேர்ந்திருக்க முடியாது. தமிழினப்படுகொலைக்கான தனித்தன்மையை ஆய்வு செய்ய ஓரளவிற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும், தற்போது பலஸ்தீனத்திற்கு திரட்டப்படுகின்ற அளவிற்கு முயற்சிகள் எடுக்கப்படவில்லை. இனப்படுகொலையின் ஒரு பரிமாணமே சட்டரீதியாக அணுகுதல், ஆனால் அதற்கு பல்வேறு பரிமாணங்கள் உள்ளன.



மிக அண்மையில் எடுக்கப்பட்ட முயற்சிகளில் தமிழினப்படுகொலைக்கு உடந்தையானவர்களை அடையாளம் காணுதலில் ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா உட்பட்ட பல்வேறு நாடுகளின் பட்டியல் இனங்காணப்பட்டது. பொறுப்புக்கூறல் பொறிமுறையில் இவர்களுக்கான தண்டனை என்ன என்பதையும் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். அதைவிட இனப்படுகொலையின் சூத்திரதாரியாக அடையாளம் காணப்படும் காலனித்துவத்தின் பங்கில் அவர்களுக்குரிய தண்டனை போன்றன இன்னும் ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை. தமிழினப் படுகொலையில் மதத்தின் வகிபாகம் ஆய்வுக்குட்படுத்தப்படுவதான முயற்சிகள் தெரிகின்றன. இராணுவமயப்படுத்தப்பட்ட பௌத்தம் பற்றிய அல்லது மதத்திற்கும் வன்முறைக்கும் இடையிலான தொடர்பு பற்றி ஆய்வுகள் வெளியாகி உள்ளன. ஆனால் தமிழினப்படுகொலைக்கும் பௌத்த மதத்திற்குமான தொடர்புகள் பற்றிய ஆய்வுகள் இன்னும் தொடங்கவில்லை.

தற்போதைய இனப்படுகொலை ஆய்வுப் பரப்பில் இனப்படுகொலைச் சாசனத்தில் இருண்ட பக்கங்களும் அம்பலப்படுத்தப்படுகின்றது. குறிப்பாக சர்வதேச சட்டம் எவ்வாறு இனவாதத்தை அடிப்படையாக கொண்டதோடு வெள்ளை மேலாண்மையை தக்கவைப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது என்பதும் கேள்விக்குட்படுத்தப்படுகின்றது ஆய்வுகள் மூலமாக. இனப்படுகொலைக்கு பல்வேறு அணுகுமுறைகள் உண்டு. உதாரணமாக சமூகவியல், மானுடவியல், உளவியல் இன்னும் பல. இவை இன்னும் ஆய்வு செய்யப்படாமலேயே உள்ளன.



இவற்றை விட இனப்படுகொலையோடு தொடர்புடைய ஏனைய குற்றங்களும் இனங்காணப்பட்டுள்ளன அவையும் தமிழ் ஆய்வுப் பரப்பில் ஆய்வுக்குட்படுத்தப்படாத வெளியாகவே உள்ளது. உதாரணத்திற்கு மிக அண்மைக் காலமாகவே பேசு பொருளாகி உள்ள அரசியல் இனப்படுகொலை *(Political Genocide)*, அரசியல் படுகொலை, பண்பாட்டுப் படுகொலை, நினைவுத்திறப் படுகொலை, கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை என பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது.

ஒரு சமூகத்தின் இருப்பு என்பது நினைவுத்திறத்தை தக்கவைப்பதில் தங்கியுள்ளது. அதே நேரத்தில் தேவை, நோக்கம் கருதிய நினைவுத்திற மீள் வாசிப்பு தென்னிலங்கையில் அடிக்கடி நிகழ்கின்றது. உதாரணமாக தென்னிலங்கையில் "அபாயகரமான நினைவுத்திறம்" அடிக்கடி மீள்வாசிக்கப்படுகிறது, தொடர்ந்தும் ஈழத்தமிழர்களை சிங்கள-பௌத்த மக்களின் எதிரியாக தக்கவைப்பதற்கான முயற்சிகள் வரலாற்றில் தமிழ்நாட்டிலிருந்து வந்த படையெடுப்பை மேற்கோள்காட்டி. ஈழத்தமிழினம் அடக்குமுறைக்கெதிராக வெவ்வேறு வடிவங்களில் போராட்டத்தை முன்னெடுத்தது தொடர்பான நினைவுகள் எல்லாமே திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன. தமிழின நினைவுத்திறத்தை ஆய்வு செய்வோரும் கூட பெரும்பாலுமே விடுதலை மைய அணுகுமுறையை தவிர்த்த தாராளவாத மையத்திலிருந்தே அணுக முற்படுகின்றனர். மேற்குலகிலிருந்து படையெடுக்கும் ஆய்வாளர்களுக்கென்று தனி அரசியல் நிகழ்ச்சித் திட்டம் உண்டு என்பது வெள்ளிடைமலை.

ஈழத்தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட பொருளாதார குற்றங்கள் தொடர்பில் இது வரையும், எனக்குத் தெரிந்து, எந்த ஆய்வுமே முன்னெடுக்கப்படவில்லை. பொருளாதார குற்றங்கள் தமிழினப்படுகொலை சார்ந்து விவரணம் பெறவில்லை. அதே போல் மரபுரிமை சார் பக்கங்களும் இன்னும் புரட்டப்படாமலேயே உள்ளது. அதைவிட தமிழினப்படுகொலைச் சாட்சியங்களின் நேரடி அனுபவங்கள் எவையுமே தமிழினத்திடம் இல்லை. அவை பெரும்பாலுமே தமிழர் அல்லாத தனியார் அரச சார்பற்ற நிறுவனங்களிடமே உள்ளன, அவையே அதற்கான ஏகபோக உரிமையையும் வைத்துக்கொள்கிறது.



நில அபகரிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர், பொருளாதார சுமையால் திருமணம் ஆகாமல் இருப்போர் அதனால் ஏற்படுத்தப்பட்ட தலைமுறையின்மை, நிறுவனமயப்படுத்தப்பட்ட வன்புணர்வு, தமிழ்ப்பெண்களுக்கெதிரான வன்கொடுமை, இராணுவமயமாக்கம் அதன் விளைவுகள் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம் இவை போன்றன தமிழினப்படுகொலை தொடர்பிலும், கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை தொடர்பிலும் ஆய்வு செய்யப்படவேண்டும்.




இவற்றிற்கான முயற்சி கூட்டு முயற்சியாக இருக்க வேண்டும் என்பது நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. போதைவஸ்து பாவனையின் அதிகரிப்புக்கும், வன்முறைக்கும், யுக்திய

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# பறிபோகும் சுதந்திர வாழ்க்கை

துரைசாமி நடராஜா

இலங்கையில் சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில் இதனைக் கட்டுப்படுத்தி சிறுவர்களின் ஒளிமயமான எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இதனிடையே மலையக சிறுவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் அண்மைக்காலமாக மிகவும் அதிகரித்து காணப்படும் நிலையில் இது தொடர்பில் சகல தரப்பினரும் விசேட கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகியுள்ளது.



சிறுவர்கள் நாட்டின் எதிர்காலத்தை சிருஷ்டிக்கும் சிற்பிகளாக விளங்குகின்றனர். இவர்களால் எதிர்கால தேசம் செழுமையுறுகின்றது. இந்நிலையில் இவர்களை ஒழுக்க சீலர்களாக, கல்வியில் மேம்பட்டவர்களாக, நாட்டிற்கு பொருத்தப்பாடு உடையவர்களாக வளர்த்தெடுக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. 19ம் நூற்றாண்டில் இருந்தே சர்வதேச ரீதியாக சிறுவர்களை பாதுகாக்கும் நோக்கில் கவனம் செலுத்தப்பட்டு வந்துள்ளது. 1924 ம் ஆண்டில் ஜெனீவாவில் சிறுவர்களை பாதுகாப்பதற்கான சர்வதேச பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது. எனினும் அது சட்ட ரீதியான அங்கீகாரம் பெறாமையால் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

1959 ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் சிறுவர் நலன் கருதி 10 அம்சங்களை உள்ளடக்கிய சிறுவர் உரிமைப் பிரகடனம் உருவாக்கப்பட்டது. எனினும் இப்பிரகடனமும் 1924 ம் ஆண்டு பிரகடனத்தைப்போன்றே சட்டவலுவற்றதாகிவிட்டது. 1989 ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் சிறுவர் உரிமை பிரகடனம் உருவாக்கப்பட்டது. இப்பிரகடனம் 1990 ம் ஆண்டு சட்ட ரீதியான அங்கீகாரம் பெறப்பட்டு நடைமுறைக்கு வந்தது. 1991 ம் ஆண்டு இலங்கை அரசு இதனை உறுதிப்படுத்தியது.




சிறுவர் உரிமைகளை உறுதிப்படுத்தும் ஏற்பாடுகள் பல காணப்பட்டபோதும் சமகாலத்தில் பல சிறுவர்கள் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாகி சிறுவர் பராயத்தையும், சுதந்திர வாழ்க்கையையும் தொலைத்து நிற்கும் பரிதாபம் மேலோங்கி வருவது கொடுமையிலும் கொடுமையாகும். இலங்கையில் கடந்த ஆண்டு பாலியல் துன்புறுத்தல்கள் உள்ளடங்கலாக 5000 குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளன. இவற்றில் 4000 இற்கும் மேற்பட்ட குற்றச்செயல்கள் பாலியல் துன்புறுத்தல்களுடன் தொடர்புபட்டவையாகும். இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானவர்களில் 167 சிறுமிகள் கர்ப்பம் தரித்துள்ளனர். இவர்களில் 127 பேர் தமது காதலரினால் இந்நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகத்தின் மகளிர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பிரதி பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர அண்மையில் தெரிவித்திருந்தார்.

### ஆய்வு வெளிப்பாடுகள்

2023 ம் ஆண்டில் சிறுவர்களை கொலை செய்தல், கொலை முயற்சி, காயமடையச் செய்தல், பாலியல் துஷ்பிரயோகம், கடத்தல் உள்ளிட்ட 3074 குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளன. இவை தவிர பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட 1463 சிறு குற்றச்செயல்களும் பதிவாகியுள்ளன. பாலியல் குற்றச்செயல்களின் அதிகரித்த போக்கினையும் இங்கு அவதானிக்கக் கூடியதாக உள்ளது. 18 வயதுக்கு உட்பட்ட சிறுமிகளுக்கெதிரான 1502 துஷ்பிரயோகங்களும், சிறுவர்களுக்கெதிரான 584 பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகங்களும், சிறுவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தல் தொடர்பில் 70 குற்றச்செயல்களும் பதிவாகியுள்ளன. இதேவேளை சிறுவர்களை வளர்ந்தோர்கள் சத்தமாக திட்டுதல் அல்லது வாய் வார்த்தைகள் மூலம் அச்சுறுத்துதல், அவமானப்படுத்துதல் முதலியன பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களைப் போன்றே பிள்ளைகளின் வளர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்துமென்று ஆய்வொன்று தெரிவிக்கின்றது.



மேலும் இத்தகைய நடத்தைகள் பாதிக்கப்பட்ட சிறுவர்களை போதைப்பொருட்களை பயன்படுத்துபவர்களாக, சிறைக்குச் செல்பவர்களாக மாற்றுவதற்கான சாத்தியத்தை அதிகரிப்பதாகவும் ஆய்வு வலியுறுத்துகின்றது. சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பை தடுப்பதற்கான சர்வதேச சமூகத்தினால் பிரசுரிக்கப்படும் ‘சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு‘ எனும் சஞ்சிகையில் இந்த ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக ஆர்.சேதுராமன் தனது கட்டுரையொன்றில் குறிப்பிடுகின்றார். சிறுவர்கள் தவறாக நடத்தப்படுவதானது நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

உடல் ரீதியான துஷ்பிரயோகம், பாலியல் ரீதியான துஷ்பிரயோகம், உணர்ச்சி ரீதியான துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு என்பன இந்நான்கு பிரிவுகளுமாகும். சிறுவர்களை இலக்கு வைத்து அதிகரித்து வரும் பாலியல் வன்கொடுமைகள் இலங்கையில் சமீபகாலமாக அதிகரித்து உயர்புள்ளிகளை பதிவுசெய்துள்ளது. நவீனகாலத்தில் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் மற்றும் உளவியல்சார் வன்கொடுமைகளுக்கு நிலையான தீர்வை நோக்கி ஐக்கிய நாடுகள் சபை உட்பட பல உலக அமைப்புக்கள் செயற்படுகின்றபோதும் அவற்றால் இறுதி இலக்கினை அடைய முடியாதுள்ளது.



இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக நாம் நோக்குகின்றபோது மலையகச் சிறுவர்களின் நிலைமை குறித்தும் நாம் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது. மலையக பெருந்தோட்டங்களில் சிறுவர்கள் அதிகமான துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாகி வருகின்றமை புதிய விடயமல்ல. இதில் பல்வேறு காரணங்கள் செல்வாக்கு செலுத்துகின்றன. சில பிள்ளைகளின் பெற்றோர் அல்லது தாய் வருமான ஈட்டல் கருதி மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழில்வாய்ப்பின் நிமித்தமாக சென்றுள்ளனர். இத்தகைய பிள்ளைகள் பெரும்பாலும் உறவினர்களின் பராமரிப்பிலேயே இருந்து வருகின்றனர். இந்த நிலையில் ‘வேலியே பயிரை மேய்ந்தாற்போல’ உறவினர்களே பிள்ளைகளை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கும் சம்பவங்கள் மலையகத்தில் இல்லாமலில்லை. அத்தோடு வறுமை, அன்பிற்கான அரவணைப்பின்மை போன்ற பல நிலைமைகளும் பிள்ளைகள் நெறி தவறுவதற்கு உந்துசக்தியாகியுள்ளன.

### பாலியல் சுரண்டல்

கடந்த 2012/2013 ம் ஆண்டு தகவலொன்றின்படி இலங்கையில் பாடசாலைக்கு செல்லாதோரின் தொகை 3.7 வீதமாகக் காணப்பட்டது. இது நகர்ப்புறத்தில் 2.2 வீதமாகவும், கிராமப்புறத்தில் 3.5 வீதமாகவும் அமைந்திருந்த அதேவேளை பெருந்தோட்டத்தில் இது 12.2 வீதம் என்ற அதிகரித்த போக்கினை வெளிப்படுத்தி இருந்தது. அண்மைய தகவலுக்கமைய 06 தொடக்கம் 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களில் 4.5 வீதமான ஆண்களும், 3.1 வீதமான பெண்களுமாக மொத்தம் 3.8 வீதமான சிறுவர்கள் வெறுமனே தோட்டங்களில் சுற்றித் திரிவதாக தகவல்கள் வலியுறுத்துகின்றன. இதேவேளை



இடைவிலகும் மாணவர்களின் தொகையிலும் அதிகரிப்பைக் காண முடிந்தது. அண்மைய தகவலொன்றின்படி முதலாம் தரத்தில் சேரும்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

## இளையோரே சிகரம் நீங்கள்

# மழலை முத்துக்களின் மதிப்புணர்ந்து கடமையாற்றுங்கள்

கவிதா ஆல்பர்ட்

காலம் மாறிக்கொண்டிருக்கிறது. கலாச்சாரம் மாறிக்கொண்டிருக்கிறது. மனிதன் செய்யும் வேலைகள் அனைத்தையும் இயந்திரங்கள் செய்வதால், மனிதர்கள் ஓய்வு என்ற பெயரில் கலரை மாற்றிக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர்.

இது வளர்ச்சியா? அல்லது வீழ்ச்சியா என்கிற கேள்வி எழுமாயின், அகிலத்தை நாம் அழிவின் விளிம்புக்குக் கொண்டுசெல்கிறோம் என்பது தான் நிதர்சனமான உண்மை. நமது முன்னோர்கள் இயற்கையைப் பாதுகாப்பதற்கு தெய்வ பயம் பயன்படும் என்று எண்ணி, ஆறு, ஏரி, குளங்களுக்கு அருகில் மரங்களை நட்டு வைத்து, அதன் அருகில் ஒரு கோவிலையும் அமைத்து வைத்தனர்.



ஆனால் இன்று கோவிலின் எல்லை விரிவடைகின்றது. ஆறு, ஏரி, குளங்களும் அதன் அவற்றுக்கு அருகில் நின்ற மரங்களும், காணாமல் போய்க்கொண்டிருக்கின்றன. பகுத்தறிவு பிறந்ததெல்லாம் கேள்விகள் கேட்பதாலே என்கிற அழுத்தமான உண்மைகள் அனைத்தும் ஆவியாகிப் போனதால், பக்தி என்பது இன்று அரசியல்வாதிகளின் அரசுரிமையை நிலைநாட்டும் ஆயுதமாக மாறிக்கொண்டுவருகிறது.

இது இப்படியிருக்க நமது தலைமுறையின் எதிர்காலம் குறித்த கலக்கம், அறிவு சார்ந்த ஆன்றோருக்கும், அறம் நிறைந்த பெற்றோருக்கும் ஏற்பட்டுள்ளது. ஏன், எதற்கு என்று ஆராய்வோமாயின், சவால்களும், சங்கடங்களும் நிறைந்த அவலங்கள், இளையோர் வாழ்வில் அணி வகுக்க ஆரம்பித்தது தான் அதற்குக் காரணம் என்கிற உண்மையை நாம் உணர முடியும்.



குடும்பங்கள் என்கிற அற்புதமான பல்கலைக்கழகங்கள் மனிதத்தன்மையை இழந்து கொண்டிருப்பதால், அதில் பாடம் பயிலும் தலைமுறையினர் வாழ்வு தடம் புரளும் நெருக்கடிக்கு தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறது. எப்படி என்று கேட்கின்றீர்களா? 'கணவன்-மனைவி' என்ற உறவுச் சங்கமம் கேலிக்கூத்தாக மாறிக்கொண்டிருப்பதால், மழலை முத்துகள் வாழ்வு மலர்ந்து, மணம் வீசாத மலர்களைப் போலக் கருகி விடும் அபாய நிலைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறது.

இளையோர் தங்களின் தடம் மாறிய வாழ்வு காரணமாகப் பிஞ்சு மலர்களைக் கசக்கி வீசவும், கருவில் அழிக்கவும் துடிக்கின்றனர். தங்களின் தவறுகளுக்கு தங்களது தலைமுறை ஏன் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று எண்ணிப்பார்ப்பதில்லை. பலர் தவறான உறவுகளால் பிறக்கும் அந்த அப்பாவி மழலை முத்துகளை குப்பைத் தொட்டிகளிலும், தெரு வீதிகளிலும் வீசிச் செல்கின்றனர்.

நாய்களால் கடித்துக் குதறப்பட்டும், எறும்புகளால் துன்புறுத்தப்பட்டும், உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த அந்த பிஞ்சுக் குழந்தைகளை மீட்டெடுத்த சமூக ஆர்வலர்கள் பலர் கலங்கிக் கண்ணீர் சிந்தி, மனப்பாதிப்புக்கு உள்ளான செய்திகள் பல வரலாற்றில் பதிவுசெய்யப் பட்டுள்ளன.

யாரோ ஒரு இரண்டாவது, மூன்றாவது மனிதர்களுக்கு ஏற்படும் பரிதாப உணர்ச்சி கூட உங்களுக்கு இல்லை. உயிர் கொடுத்து, உயிர் சுமந்து பெற்றெடுத்த அந்தப் பிஞ்சு மலர்களை இப்படிப் பலிகொடுக்கும் படுபாதகச் செயலைச் செய்யத் துணிகின்றீர்கள். அந்த குழந்தை ஒன்றில் நீங்கள் வீசி எறிந்த இடத்திலிருந்து பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுச் சிதைந்து அழிகிறது. அல்லது யாரோ ஒரு கருணை மனத்தால் எடுத்துச் செல்லப்பட்டு, அநாதை என்ற பெயரில் அந்தக் குழந்தை வளர்ந்து, ஆளாகி, வலிகளின் வழியை அது அறிந்து துடிக்கிறது.

இன்னும் சிலர் கணவன்-மனைவி உறவுகளில் ஏற்படும் இலக்கணப் பிறழ்வுகளால் தாங்கள் பெற்ற பிஞ்சுகளையே நஞ்சு கொடுத்துக் கொல்லும் அவலமும் இன்னும் பல்வேறு வழிகளில் அழித்தொழிக்கும் அவலமும் அரங்கேறுவதைக் காணும் போது, கண்களும் இதயமும் ஈரமாகின்றன. ஆனால் இத்தகைய இளம் வயதினர்க்கு தாங்கள் பெற்ற பிள்ளைகளை விட சுகங்களே முதன்மையானதாக இருப்பதை எண்ணும் போது இதயம் வலிக்கிறது.

கணவனுக்குத் துரோகம் செய்யும் மனைவியும், மனைவிக்குத் துரோகம் செய்யும் கணவனும் என்கிற துரோகக் கலாச்சாரமாக இன்று துரிதமாக வளர்ச்சியடைந்து வருவதற்குக் காரணம் பெற்றோர்களும் இந்தச் சமூகமும் தான்.

முன்பெல்லாம் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு ஒழுக்கத்தைக் கற்றுக்கொடுப்பது தான் உயிர் எனப் போற்றினர். இன்றைய நவநாகரீகப் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு பணத்தையும் பகட்டான வாழ்வையும் கொடுப்பதே சமூக அந்தஸ்து என்று கருதுகின்றனர். அது தான் அவர்களை வழி தடுமாறி, வழுக்குப் பாதையில் சிக்கிச் சிதைவுக்கு உள்ளாக்குகிறது.

மூன்று குழந்தைகள் பிறந்தால் மூன்று பேருக்கும் மூன்று அப்பாக்கள். கடைசியில் இந்தக் குழந்தைகளை வளர்ப்பதற்கு, எந்த அப்பாவும் அந்த இளம்பெண்ணுடன் இருப்பதில்லை. அப்பாவின் அன்பும், அற வழிகாட்டுதலும் கிடைக்காமல் அந்தக் குழந்தை தன் உயிர் வாழ்வுக்கே போராடி, ஏக்கத்தோடும், பலவித எதிர்பார்ப்புகளோடும் நகர்த்துகின்றது.

விளைவு அவர்களுக்கு வாழ்க்கையில் பிடிப்பு இல்லாத நிலை ஏற்படுகின்றது. தன் மீதும் தனக்கு நம்பிக்கை இல்லாத பதற்ற மனநிலை உருவாகிறது. அது அவர்களை விரக்தியாளர்களாக, குற்றவாளிகளாக மாற்றுகின்றது. ஒரு சிலர் மட்டுமே வாழ்க்கை வெள்ளோட்டத்தில், எதிர் நீச்சலிட்டுப் போராடி வெற்றிபெறுகின்றனர். பெரும்பாலானவர்களுக்கு வாழ்வு கேள்விக் குறியாகத் தான் மாறுகின்றது.

மேலை நாடுகளில் தொற்றி வளர்ந்து கொண்டிருந்த இந்தக் கலாச்சாரம், இன்று தமிழர் பண்பாட்டையும் சிதைவுக்கு உள்ளாக்கும் வகையில் உலகம் முழுவதும் பரவி வாழும் தமிழ் மக்களின் வாழ்விலும் இது போன்ற கொடுமைகளைக் கண்டு கலங்குகிறது மனம்.

இளையோரே, நீங்கள் மதிப்பு மிக்கவர்கள் என்பதை உணர்ந்து வாழ வேண்டும். உங்களால் உருவாக்கப்படும் சந்ததிகள் மதிப்பு மிக்கவர்கள் என்பதை நீங்கள் உணரவேண்டும். ஒரு குழந்தையை பண்பாட்டுடனும் அறநெறிகளுடனும் பெற்று, வளர்த்து, ஆளாக்கத் தெரியாதவர்கள் மழலை முத்துக்களைப் பெற்றெடுக்கும் எண்ணங்களை விட்டொழியுங்கள்.



ஏனென்றால் பூமியில் பிறக்கும் ஒவ்வொரு உயிரும் உன்னதமானது, மதிப்புமிக்கது. அவர்களை நல்லவராகவோ, வல்லவராகவோ வளர்த்து, ஆளாக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் உங்களுடையது. உங்கள் பெற்றோர் உங்களைப் பூமியில் மேன்மையான வர்களாகப் பெற்று, வளர்த்து, ஆளாக்கிப் பெயர் சொல்ல வைத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

வாழ்க்கை ஒரு வரம். அது உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது போல நீங்களும் உங்கள் மழலை முத்துக்களுக்குக் கொடுக்க வேண்டும். எப்படியும் வாழலாம் என்கிற எண்ணத்தை மாற்றி, இப்படித்தான் வாழவேண்டும் என்கிற உயரிய எண்ணத்தை உயர் பண்பாடாகப் போற்றி வளர்க்க வேண்டும். மதிப்புமிக்கவர்கள் மழலைகள் என்கிற மதிப்புணர்ந்து, அவர்களைப் பெற்றுப் பேர் சொல்ல வளர்த்து ஆளாக்குங்கள்.

தொடரும்...

# கச்சத் தீவும் தமிழின உரிமை அரசியலும்

இந்தியப் பொதுத் தேர்தலுக்கான பரப்புரையில் தமிழ்நாட்டில் கச்சத்தீவுச் சிக்கல் மீண்டும் பேசுபொருளாயிற்று. 1974ஆம் ஆண்டு சூன் 06ஆம் நாள் இந்திய அரசுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி அது வரை இந்தியாவின் இறைமைக்கு உட்பட்டிருந்த கச்சத்தீவு சிறிலங்காவிடம் ஒப்படைக்கப்பட்டது. அடுத்து 1976ஆம் ஆண்டில் இரு நாடுகளும் தங்களுக்கிடையிலான எல்லையை முழுமையாக மதித்து நடக்க வேண்டும் என அதிகாரிகள் மட்டத்தில் செய்து கொண்ட உடன்படிக்கை கச்சத்தீவின் மீதான சிறிலங்காவின் இறைமையை முழுமையாக்கிற்று.



கச்சத்தீவு இவ்விதம் சிறிலங்காவிடம் ஒப்படைக்கப்பட்ட போது இதற்குத் தமிழக அரசின் ஒப்புதல் பெறப்படவில்லை, தமிழ்நாடு சட்டப் பேரவையின் ஒப்புதலும் பெறப்படவில்லை. அப்போதைய தமிழ்நாட்டு முதலமைச்சர் கருணாநிதி அவர்களிடம் தகவல் தரப்பட்டதோடு சரி. அவரது எதிர்ப்போ தமிழ்நாட்டு மக்களின் எதிர்ப்போ இந்திய அரசால் மதிக்கப்பெறவே இல்லை. நாடாளுமன்றத்தில் திமுக சார்பில் இரா செழியனும், அதிமுக சார்பில் நாஞ்சில் மனோகரனும், கச்சத்தீவு சிறிலங்காவுக்குத் தரப்பட்டதை வன்மையாகக் கண்டித்துப் பேசினார்கள். பார்வர்டு பிளாக் தலைவரும் கச்சத்தீவு இடம் பெற்ற இராமநாதபுரம் மக்களவைத் தொகுதி உறுப்பினருமான பி.கே. மூக்கையாத் தேவர் கச்சத்தீவு இலங்கைக்குத் தாரை வார்க்கப்படுவதைக் கண்டித்துப் பேசினார். கச்சத்தீவு தொடர்பான இந்தியத் தலமையமைச்சர் இந்திரா காந்தியின் முடிவை சிறந்த அரசதந்திர நகர்வு என்று போற்றிய ஒரே ஒரு தமிழ்நாட்டுத் தலைவர் மார்க்சியக் கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த பி. இராமமூர்த்திதான்.

அது என்ன அரசதந்திரம்? பன்னாட்டு அரங்கில் தனிமைப்பட்டிருந்த இந்திரா அம்மையார் இலங்கைத் தலைமையமைச்சர் சிறிமா பண்டாரநாயக்கா அம்மையாரின் ஆதரவைப் பெறுவதற்கு விலையாகத்தான் கச்சத் தீவை எடுத்துக் கொடுத்தாராம்.

கச்சத்தீவு இலங்கைக்குத் தரப்பட்டதை எதிர்த்த போதும், அன்றும் இன்றும் அதை மீட்க வேண்டும் என்று குரல்கொடுக்கும் போதும் தமிழகத் தலைவர்கள் "இந்தியாவுக்குச் சொந்தமான கச்சத்தீவு" என்றுதான் பேசி வருகின்றனர். தமிழ்ச் சிற்றரசராகிய இராமநாதபுரம் சேதுபதியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த கச்சத்தீவு எப்போது எப்படி இந்தியாவுக்குச் சொந்தமானது? தமிழ்நாட்டுக்குச் சொந்தமான கச்சத்தீவை இந்தியா எடுத்து இலங்கைக்குக் கொடுத்து விட்டது என்பதே உண்மை. கடைத் தேங்காயும் வழிப் பிள்ளையாரும் கதைதான்! தமிழ்நாட்டின் இறைமையை இந்தியப் பேரரசு மதிக்கவில்லை என்பதே இச்சிக்கலின் சாரம். எனவே கச்சத்தீவு மீட்புக்கான போராட்டம் என்பது தமிழ்த் தேச இறைமை மீட்புக்கான போராட்டத்தின் ஒரு பகுதியே ஆகும்.

மறுபுறம் கச்சத்தீவு இப்போது இலங்கையில் யாழ் மாவட்டம் நெடுந்தீவு பிரதேசச் செயலகத்தின் கீழ் இருந்து வருகிறது. அதாவது தமிழீழத் தாயகத்தின் ஆட்சிப் புலத்தில் உள்ளது. தமிழீழப் போராட்டத்தில் 1983 கறுப்பு சூலை தொடக்கம் சிங்கள இனவழிப்புப் படைகள் தமிழ்நாட்டு மீனவர்களைக் கொன்று குவித்த கொடுமை பெருமளவுக்குக் கச்சத்தீவு சூழ நடந்தேறியது. இப்போதும் சிங்கள அரசின் பண்பாட்டுப் படையெடுப்பு, கட்டமைப்பியல் இனவழிப்பு ஆகியவற்றின் கூறாகவே சில காலம் முன்பு கச்சத் தீவில் 'புத்தர் எழுந்தருளினார்'.

கச்சத்தீவின் வருங்காலம் பற்றித் தமிழக மக்கள் போலவே தமிழீழ மக்களும் கவலை கொள்ள வேண்டும். ஆனால் தமிழீழத் தாயகத்தின் அரசியல் தலைவர்கள் கச்சத்தீவு பற்றி வாய்திறப்பதே இல்லை. ஒரு புறம் சிங்களப் பேரினவாத அரசையோ மறுபுறம் இந்திய வல்லரசையோ முகம்பார்த்துப் பேசும் நிலையில் தான் அவர்கள் இருப்பதாகத் தெரிகிறது.



**தியாகு**
பொதுச்செயலாளர், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

எந்த இந்திய அரசும் கச்சத்தீவைத் தமிழ்நாட்டுக்கு மீட்டுக் கொடுக்கும் என நான் நம்பவில்லை. அண்மையில் பாரதிய சனதா கட்சி தமிழ்நாட்டில் கச்சத் தீவு பற்றிப் பேசியது இழிவான தேர்தல் தந்திரம் என்பதற்கு மேல் ஒன்றுமில்லை. காங்கிரசு – திமுக கூட்டணி மீது குற்றம் சுமத்துவதும், இரு கட்சிகளுக்குமிடையே சண்டை மூட்டுவதுமே நோக்கம். கச்சத்தீவு தொடர்பான 1974 உடன்படிக்கையை முறையாக நீக்கம் செய்யாமல் பன்னாட்டுச் சட்டங்களின் படி இந்தியா கச்சத்தீவை மீளப் பெற முடியாது. உலக நீதிமன்றத்துக்குச் சென்றாலும் எளிதில் வெற்றி கிட்டாது. எந்தச் சிங்கள அரசும் மெய்யாகவே இதற்கு இணங்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. சிங்களப் பேரினவாத மனநிலையை எதிர்த்து இதைச் செய்யக் கூடிய சிங்களத் தலைவர் எவருமில்லை. சென்ற ஆண்டு இந்திய உச்ச நீதிமன்றத்தில் இந்திய அரசு கூறியது: கச்சத்தீவை மீட்பது என்றால் இராணுவப் படையெடுப்புதான் நடத்த வேண்டும், அந்தப் பேச்சுக்கே இடமில்லை.

இறைமை மீண்ட தமிழ்நாடும் இறைமை மீண்ட தமிழீழமும்தான் எதிர்காலத்தில் இரு நாடுகளின் கூட்டுப் பாதுகாப்பு, மக்கள் நலன், இந்தியப் பெருங்கடல் வட்டாரத்தில் அமைதி ஆகிய தேவைகளையும் பிற காரணிகளையும் கணக்கில் கொண்டு கச்சத்தீவுச் சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டியிருக்கும்.

ஆனால் கச்சத்தீவுச் சிக்கலில் தொடர்புடையதாக இருக்கும் மீனவர்களின் நலன் கருதி உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய தேவை உள்ளது. பாக்கு நீரிணையின் இருகரையிலும் – தமிழ்நாட்டிலும் தமிழீழத்திலும் – அடர்ந்து வாழ்வோர் மீனவர்களே. இங்கும் தமிழ் மீனவர்கள், அங்கும் தமிழ் மீனவர்கள். மீனவர்களின் மீன்பிடித் தேவையோடு ஒப்பிட்டால் அந்த நீர்ப்பரப்பு மிகக் குறைவானது. மீன் பிடிக்கப் படகோட்டும் போதும் வலை வீசும் போதும் துல்லியமாக எல்லைகளுக்குள் நிற்க இயலாது. இரு தரப்பிலும் எல்லை மீறல் இருக்கவே செய்யும். தமிழர்கள் மோதிக் கொள்வதையே இந்திய, சிங்கள அரசுகள் விரும்புகின்றன. இருதரப்பு மீனவர்களும் தமது சங்கங்களைக் கொண்டு பேச்சு நடத்தித் தமிழ்த் தோழமையோடு இணக்கம் காண வேண்டும்.




தமிழ்நாட்டு மீனவர்களில் ஒருபிரிவினர் பயன்படுத்தக் கூடிய வலைகள் தொடர்பாகத் தமிழீழ மீனவர்கள் கொண்டுள்ள ஆழமான மன வருத்தத்தை அலட்சியம் செய்வதற்கில்லை. அதே போல் மீன்பிடிப் பருவங்கள் தொடர்பான கருத்து வேறுபாடுகளும் கசப்புகளும் பேசித் தீர்க்கப்பட வேண்டும். தமிழ்நாட்டு மீனவர்களுக்குள்ளேயே இவ்வாறான வேற்றுமைகளும் பூசல்களும் இருக்கும் போது இருநாட்டு மீனவர்களுக்கிடையே சிக்கல்கள் இருப்பதில் வியப்பில்லை. கடலன்னை வாரி வழங்கும் செல்வத்தை ஒரு தரப்பே அளவுமீறி வழித்து விடாமல் தமிழன்னையின் புதல்வர்கள் தமக்குள் பகிர்ந்து பல்லுயிர் ஓம்ப வழிகாண வேண்டும். இந்தத் தமிழிணக்கத்துக்கு அரசுகள் செய்யும் இடையூறுகளுக்கும் முகங்கொடுக்க இருதரப்பிலும் நம் மக்கள் அணியமாக வேண்டும்.

இரு புறமும் தமிழர்கள் உரிமை பெற்று தமிழர் கடலில் இனிமை பொங்கும் போது கச்சத்தீவும் மீனவர் முரணும் கடந்த கால வரலாறாகிப் போகும்.

• • •

**ரிக்றொக் ... தொடர்ச்சி ...**

சமூகவலைத்தளங்களின் வருமானத்தை குறைப்பதால் அமெரிக்கா இந்த திட்டத்தை மேற்கொள்வதாக குற்றச்சாட்டுக் கள் எழுந்துள்ளன.

ரிக்றொக் சமூகவலைத்தளம் தனது பாதுகாப்புக்கு ஆபத்தானது என அமெரிக்கா காரணம் கூறும் அதேசமயம், ஐரோப்பிய நாடுக ளில் உள்ள சிறுவர்களை அது பாதிப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. அது புகைப்பிடித் தலைப் போல சிறுவர்களை அடிமையாக்குவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நிறுவனம் தாம் கேட்கும் ஆவணங்களை தராதுவிட்டால் அதன் வருமானத்தில் 1 விகித நிதியை தண்டமாக அறவிடப்போவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அதேசமயம், ரிக்றொக் சமூகவலைத் தளத்தை அமெரிக்காவை சேர்ந்தவருக்கு விற்பனை செய்யுமாறு அமெரிக்கா அதன் உரிமையாளரை மிரட்டிவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# உலகின் மிகச்சிறந்த புலனாய்வு அமைப்பின் தோல்வி

வேல்ஸில் இருந்து அருஸ்

இஸ்ரேலிய அரசும் அதன் படையினரும் தொடர் பின்னடைவுகளை சந்திக்க ஆரம் பித்துள்ளனர். ஒக்டோபர் 7 ஆம் நாள் ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதல் ஏழு மாதங்கள் கடந்தும் இஸ்ரேலிய ஆட்சிப்பீடத்தையும், படைத் தரப்பையும் ஆட்டம்காண வைத்துவருகின்றது.



ஏப்பிரல் 22 ஆம் நாள் திங்கட்கிழமை இஸ் ரேலின் புலனாய்வு அமைப்பின் பிரதம கட்டளை அதிகாரியான மேஜர் ஜெனரல் அகரோன் ஹலிவா ஹமாஸின் தாக்குதலைத் தடுக்கத் தவறிய தோல்வியை ஏற்று தனது பதவியை துறந்துள்ளார். சிப்பாயாக, கட்டளை அதிகாரியாக 38 வருடங்கள் இஸ்ரேலிய படைக்கட்டமைப்பில் பணியாற்றிய அவரின் பதவி விலகல் என்பது ஹமாஸின் தாக்குதலின் பின்னர் இஸ்ரேலிய படை மட்டத்தில் இடம்பெற்ற முதலாவது உயர்மட்ட விலகலாகும். அவரைத் தொடர்ந்து மேலும் பல தளபதிகள் விலகலாம் என்ற எதிர்பார்ப்புக்கள் இஸ்ரேலில் எழுந்துள்ளன. அவருக்கு பதிலாக புதியவர் நியமிக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலின் முப்படைக ளின் பிரதானியான லெப். ஜெனரல் ஹெர்சி ஹலிவி தெரிவித்துள்ளார். புலனாய்வுக் கட்டளை அதிகாரியின் பதவி விலகலை பாதுகாப்பு அமைச்சர் யோஆவ் கலன்ற் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் ஒரு புலனாய்வுத்துறையின் ஜெனரல் தர அதிகாரி தனது புற்றுநோய்க்கான சிகிச்சை முடிந்ததும் பதவியை துறக்கவுள்ளார். இஸ்ரேலின் சின்பெற் எனப்படும் பாதுகாப்பு அமைப்பின் கட்டளை அதிகாரி உட்பட மேலும் பல மூத்த அதிகாரிகளும் மிக விரைவில் பதவியை துறக்கவுள்ளதாக உள்ளக தகவல்கள் தெரிவிக்கின் றன.

இஸ்ரேலின் புலனாய்வுப் பிரியின் ஆய்வு மையத்தின் கட்டளை அதிகாரியான பிரிகேடியர் ஜெனரல் அமிற் சார் என்பவரும் கடந்த 4 ஆம் நாள் பதவி விலகலுக்கான கடிதத்தை சமர்ப்பித்துள்ளார். அதாவது உலகில் தலைசிறந்த புலனாய்வு அமைப்பாக கருதப்பட்ட இஸ்ரேலின் புலனாய்வு அமைப்பு ஒட்டுமொத்தமாக ஆட்டம் கண்டுள்ளது.



ஹமாஸ் தாக்கப்போகிறார்கள் என்பதை முன்கூட்டியே கணிக்கத் தவறிவிட்டேன், மிக முக்கிய படை நடவடிக்கையில் நாம் தோற் விட்டோம். நான் அதற்கு முழு பொறுப்பையும் ஏற்கிறேன் ஆனால் காசா போரின் வெற்றிவரை நான் எனது பதவிவிலகலை தள்ளிப்போடுகிறேன் என ஹலிவா முதலில் தொவித்திருந்தார்.

எனினும் 7 மாதங்கள் கடந்த நிலையில் காசா போரில் இஸ்ரேல் வெற்றிபெறாதபோதும், தோல்விக்கானஉள்ளகவிசாணைகளைவலியுறுத்தி அவர் தனது பதவியை துறந்துள்ளார். உள்ளக விசாரணைகள் ஜுன் மாதம் ஆரம்பமாகவுள்ளன. இந்த தோல்வியின் வலிகள் என் வாழ்நாள் முழுவதும் இருக்கும் என அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

3000 ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலுக்குள் புகுந்து மேற்கொண்ட தாக்குதலில் 350 படையி னர் உட்பட 1200 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன், 253 பேர் கடத்திச் செல்லப்பட்டிருந்தனர். ஆனால் கடந்த 7 மாதமாக இஸ்ரேலிய படையினரால் அவர்களை மீட்க முடியவில்லை.

தாக்குதல் இடம்பெற்ற சமயம், செங் கடலின் கரையில் உள்ள எய்லற் பகுதியில் ஆடம்பரவிடுதியில் ஹலிவா விடுமுறையை கழித்துக்கொண்டிருந்தார். தாக்குதல் இடம்பெறப் போவதாக அதிகாலை 3 மணிக்கு அவருக்கு தகவல் சொல்லப்பட்டபோதும் அவர் அதனை பொருட்படுத்தவில்லை. அது தொடர்பில் படைத்துறையின் உயர் மட்டங்களுடன் அவர் கலந்தாலோசிக்கவுமில்லை.

ஆனால் தான் அப்படி உயர் மட்டத் தினருக்கு தெரியப்படுத்தினாலும், தாக்குதலை தடுப்பதற்கான காலஅவகாசம் கடந்து விட்டது எனவே அது பயனளிக்காது என அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்த தாக்குதல் திட்டம் தொடர்பில் சில மாதங்களுக்கு முன்னரே கலந்துரையாடப்பட்டதாக புலனாய்வுத் துறையின் அதிகாரிகள் சிலர் தெரிவித்ததாக இஸ்ரேலின் அலைவரிசை 12 என்ற ஊடகம் தெரி வித்துள்ளது.



ஹமாஸ் படையினர் பயிற்சிகளில் ஈடு படுவது மற்றும் சந்தேகத்துக்கு இடமான நடமாட்டங்களை காவல்கோபுரங்களில் இருந்து படையினர் அவதானித்துள்ளதுடன், தகவல்களை புலனாய்வுத்துறைக்கு அனுப்பியிருந்தனர். அதாவது ஒரு வருடத்திற்கு முன்னரே இந்த தகவல்கள் தெரியும் எனவும், ஆனால் அத்தகைய தாக்குதலை நடத்தும் வலு ஹமாஸிடம் இல்லை என இஸ்ரேலிய புலனாய்வுத்துறை நம்பியதாக த நியூயோர்க் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

ஒக்டோபர் தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேலின் அரசியல் மற்றும் படைத்துறை தோல்விகளுக்கு எதிராக பொதுமக்களிடம் பலத்த எதிர்ப்புக்கள் அதிகரித்து வருகின்றது. இஸ்ரேலிய பிரதமர் நெத்தனியாகு பதவிவிலக வேண்டும் என தொடர் ஆர்ப்பாட்டங்களும் இடம் பெற்றுவருகின்றன.

இஸ்ரேலின் மத்திய படைக்கட்டமைப்பை சேர்ந்த கட்டளை அதிகாரியான ஜெகுடா புஸ்ச் என்பவரும் பதவி விலகவுள்ளதாக அறி வித்துள்ளார். இவர் மேற்குக்கரைப் பகுதிக்கு பொறுப்பானவர். 1973 ஆம் ஆண்டு இடம்பெற்ற யோம் கிபூர் போர் மற்றும் 1982 ஆம் ஆண்டு இடம்பெற்ற லெபனான் படுகொலை தொடர்பில் அமைக்கப்பட்ட விசாரணக்குழுக்கள் இஸ்ரேலில் பலத்த அரசியல் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தன. அவ்வாறான ஒரு நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேலிய புலனாய்வுத்துறையின் தோல்விக்கு எதிராக இஸ்ரேலில் எதிர்ப்புக்கள் வலுவாகி வருகின்றன. இஸ்ரேலின் ஜனநாயகத்துக் கான நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பில் ஒக்டோபர் 7 தாக்குதலை தடுக்க தவறியவர்கள் பதவி விலக வேண்டும் என 62 விகித மக்கள் விரும்புகின்றனர். இந்த வருடம் தேர்தல் இடம் பெறவேண்டும் என 51 விகிதமானவர்கள் விரும்பு கின்றனர் என தெரிவித்துள்ளது.




ஆனால் காசா போர், ஹிஸ்புல்லாக்களுடன் மோதல், ஈரானுடன் மோதல் என களமுனைகள் விரிவாக்கம் அடைந்துள்ளதால் இஸ்ரேலிய அரச மற்றும் படைத்துறையில் உள்ளவர்கள் பதவி விலக மறுக்கின்றனர். எனினும் தற்போது ஹலிவாவின் பதவி விலகல் என்பது நெத்தனியாகுவின் பதவி விலகலுக்கான கோரிக்கையை வலுப்பெற வைத்துள்ளது. தற்போதைய அரசில் நம்பிக்கை இழந்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

புலனாய்வு அதிகாரியின் பதவி விலகலை மதிப்பதாகவும், அதனை இஸ்ரேலிய பிரதமர் பின்பற்ற வேண்டும் எனவும் இஸ்ரேலின் எதிர்க்கட்சியின் தலைவர் ஜாயிர் லபிட் தெரிவித்துள்ளார்.



இஸ்ரேலிய அரசு மற்றும் படையினர் மீது போர்க்குற்ற விசாரணை தொடர்பான கோரிக்கைகளும் வலுப்பெற்று வருகின்றன.

அதேசமயம், ஈரானின் ஜெனரல்கள் மீதான

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

# ஹிஸ்பொல்லாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையே அடுத்து நடக்கப் போவது என்ன?

இறுதிப்பகுதி

தமிழில்: ஜெயந்திரன்

**தனது அரசியலைத் தக்க வைக்க நெத்தன்யாகு ஆடும் நாடகம்**

போர்க்களத்தில் இஸ்ரேல் அனுகூலங்களைச் சந்திக்கின்ற போதிலும், உள்நாட்டில் இஸ்ரேல் பல பிரச்சினைகளைத் தற்போது எதிர்கொண்டு வருகிறது.



“இஸ்ரேல் அரசு நாட்டுக்குள்ளேயே நிறைய நெருக்கடிகளைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது, என்பதுடன் அதன் இராணுவ நிலைமை சிக்கலான தாகவே இருக்கிறது” என்று கசெம் காசீர் Qassem Kassir) என்ற ஹிஸ்பொல்லாவுக்கு நெருக்கமான அரசியல் ஆய்வாளர் அல்ஜஸீராவிடம் தெரிவித்தார்.

“தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருக்கின்ற ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக சிறைசெல்வதிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் ஒரே நோக்குடன் தான், தனது நாடான இஸ்ரேலை தொடர்ந்தும் போருக்குள் நெத்தன்யாகு வைத்திருக்கின்றார்” என்று பல ஆய்வாளர்கள் நம்புகின்றனர். “நெத்தன்யாகு பதவி விலகுவதையே நான்கில் மூன்று பகுதி இஸ்ரேலியர்கள் விரும்புகின்றனர்” என்று இஸ்ரேலில் அண்மையில் முன்னெடுக்கப் பட்டிருக்கின்ற கருத்துக்கணிப்பு கள் கோடிட்டுக்காட்டுகின்றன. கடந்த ஒக்ரோபர் 7ம் திகதி, ஹமாசால் இஸ்ரேலில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்குக் காரணமான பாதுகாப்பு பலவீனங்கள் தொடர்பாக நெத்தன்யாகுவுக்கு இருக்கும் ஆதரவு மிகக் கடுமையான சரிவைச் சந்திருக்கிறது என்பது மட்டுமன்றி, நெத்தன்யாகுவின் வலது சாரி அரசு கடந்து வருடம் அமுலாக்கிய சட்டத் திருத்தங்களுக்கு எதிராகவும், மக்கள் நடுவில் அவருக்கு எதிராக மிகவும் கடுமையான எதிர்ப்பு பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.



இஸ்ரேலிய சமூகத்திடமிருந்து நெத்தன்யாகுவுக்கு எதிராகக் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்படும் அதே நேரம், அவரது ஆட்சிக்கு எதிராகவும், போரை அவர் கொண்டு நடத்தும் முறைக்கு எதிராகவும் பலமான ஆர்ப்பாட்டங்கள் அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இது இப்படியிருக்க, உள்நாட்டில் அவரது எதிரிகளோ அவரைச் சூழ்ந்துகொண்டுள்ளனர். ‘தேர்தல் நடத்தப்பட வேண்டும்’ என்ற குரல் நாளுக்கு நாள் பலமடைந்து வருகின்றது. நெத்தன்யாகுவின் போருக்கான அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்ற நெத்தன்யாகுவுடன் பிரதம அமைச்சர் பதவிக்காகப் போட்டியிட வல்ல பெனி கான்ட்சும் (Benny Gantz) இவ்வாறு தேர்தலை விரைவில் நடத்துமாறு அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

“தாக்குதல் நடைபெற்று, அண்ணளவாக ஓராண்டு நிறைவுபெறும் தருணத்தில் அதாவது “வருகின்ற செப்டெம்பர் மாதத்தில் தேர்தலுக்கான ஒரு தேதி நிர்ணயிக்கப்படவேண்டும”; என்று இஸ்ரேலிய தொலைக்காட்சி ஒன்றுக்கு பெனி கான்ட்ஸ் அளித்த செவ்வியில் குறிப்பிட்டார்.

“அவ்வாறு தேர்தலுக்கு நாம் ஒரு தேதியை நிர்ணயிக்கும் பட்சத்தில், விரைவில் அவர்கள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை நாம் புதுப்பிப்போம் என்ற சமிக்ஞையை இஸ்ரேல் மக்களுக்கு எம்மால் கொடுக்கக்கூடியதாகவிருக்கும்.”

அல்ஜஸீராவுடன் உரையாடிய ஆய்வாளர்களின் கருத்துகளைப் பார்க்கும் போது, இரண்டு விடயங்கள் மிகத் தெளிவாகத் தெரிகின்றன. தொடர்ந்து பிரதம அமைச்சர் பதவியில் நிலைக்க வேண்டும் என நெத்தன்யாகுவுக்கு இருக்கும் ஆசை, போரை எவ்வளவு காலத்துக்குத் தொடர முடியுமோ அவ்வளவு காலத்துக்குத் தொடர அவரைத் தூண்டும். இரண்டாவதாக லெபனானில் ஹிஸ்பொல்லாவுக்கு எதிரான தாக்குதலை மேற்கொள்ளும் விடயத்தில் இஸ்ரேலில் பரவலான ஆதரவு இருக்கிறது.



“இதனால் லெபனானில் ஏற்படக்கூடிய விளைவுகள் பாரதூரமானவை: இஸ்ரேலில் உள்ள 70 வீதத்துக்கும் அதிகமான மக்கள் ஹிஸ்பொல்லா மீது தாக்குதலை மேற்கொள்வதற்கு ஆதரவு அளிக்கின்றார்கள் என்று அண்மையில் அங்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பு தெரிவித்தது” என்று பெய்ரூத்தில் அமைந்திருக்கின்ற புனித சூசையப்பர் பல்கலைக்கழகத்தில் பன்னாட்டு உறவுகளில் பேராசிரியராக விளங்குகின்ற காறிம் எமில் பீட்டார் அல்ஜஸீராவுக்குத் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் நெத்தன்யாகுவுக்கு இருக்கும் ஆதரவு லெபனானில் விரைவாக ஒரு தாக்குதலை மேற்கொண்டு, இந்தப் போரை இன்னும் விரிவுபடுத்துவதற்குத் அவரைத் தூண்டும். அதற்கான காரணம் என்னவென்றால் தற்போது ஏற்பட்டுள்ள வாய்ப்பைப் பயன்படுத்தி, ஹிஸ்பொல்லா மீது தாக்குதல்களைத் தொடுத்து, அந்தப் பிரதேசத்தில் ஈரானுக்கு இருக்கக்கூடிய பலத்தைக் கணிசமான அளவு குறைக்க வேண்டும் என்பதில் இஸ்ரேலியர் பலர் ஆர்வமாக இருக்கிறார்கள்.

**ஹிஸ்பொல்லாவுக்கு எதிரான தாக்குதல்: தரைவழியா ? வான்வழியா?**

ஹிஸ்பொல்லாவுக்கு எதிரான தாக்குதல்களை விரிவுபடுத்துவதற்கு, இஸ்ரேலுக்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்றில் தரைவழியான ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்படலாம் அல்லது ஆளில்லா விமானங்கள் மற்றும் தாக்குதல் ஜெற் விமானங்களைப் பயன்படுத்தி, வான்வழித் தாக்குதல்களும் முன்னெடுக்கப்படலாம்.

லெபனானுடன் இஸ்ரேல் இதற்கு முன்னர் மேற்கொண்ட யுத்தங்களின் வரலாற்றைப் பார்க்கும் போது, அங்கு தரைவழித் தாக்குதலுக்கான வாய்ப்பு அதிமாக இல்லை என்றே அல்ஜஸீராவிடம் பேசிய ஆய்வாளர்கள் பலர் கருத்துத் தெரிவித்தனர்.

1978ம் ஆண்டிலும் 1982ம் ஆண்டிலும் இஸ்ரேலியர்கள் லெபனானை ஆக்கிரமித்தது மட்டுமன்றி, அதன் தலைநகரமான பெய்ரூத்தை (Beirut) முற்றுகைக்குள்ளும் வைத்திருந்தனர். லெபனானின் தென்பகுதியை 1985 இல் ஆக்கிரமித்த இஸ்ரேலியர்கள் 2000ம் ஆண்டுவரை அந்த ஆக்கிரமிப்பை தொடர்ந்திருந்தனர். 2006ம் ஆண்டிலும் ஹிஸ்பொல்லாவும் இஸ்ரேலும் ஒரு போரில் ஈடுபட்டிருந்தன.

கடந்த காலத்தைய அவ்வாறான அனுபவங்கள், இஸ்ரேலியரின் மனதில் இன்னும் பசுமையாகவே இருக்கின்றன என்று ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டினர்.

தரைவழித் தாக்குதலுக்கான வாய்ப்பு மிகவும் குறைவாகவே இருக்கின்றது என்று பீற்றார் தெரிவித்தார். லெபனான் நாட்டில் இஸ்ரேலியருக்கு நீண்ட கால அனுபவம் இருக்கிறது. லெபனானின் நிலப்பரப்பு தொடர்பாக ஹிஸ்பொல்லா அதிகமாகவே அறிந்துவைத்திருக்கிறார்கள். அப்படி, அங்கு இஸ்ரேல் ஒரு தரைவழித் தாக்குதலை மேற்கொள்ளும் பட்சத்தில் இஸ்ரேலிய இராணுவம் அங்கு மிகவும் கடுமையான இழப்புகளைச் சந்திக்கும். அப்படி நடக்குமானால் இஸ்ரேலில் பொதுமக்கள் மத்தியில், நெத்தன்யாகுவுக்கு இருக்கும் ஆதரவில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்படும்.

லெபனானை முற்றுமுழுதாக ஆக்கிரமிப்பதைத் தவிர்த்து, எவ்-16 (F-16) தாக்குதல் விமானங்களைப் பயன்படுத்தி வான்வழித் தாக்குதல்களையும் வான்வழிக் குண்டுவீச்சுகளையுமே அவர்கள் மேற்கொள்ள முயற்சிப்பார்கள்.



“எல்லையை அண்டியிருக்கும் லிட்டனி ஆற்றுக்கு முன்னுள்ள பகுதியில் ஹிஸ்பொல்லாவை அகற்றி, அங்கு தமக்குச் சாதகமான ஒரு இடைப்பகுதியை (buffer zone) உருவாக்கும் நோக்குடன், மட்டுப்படுத்தப்பட்ட ஒரு தரைத் தாக்குதலை இஸ்ரேல் மேற்கொள்ளலாம்.”

“தரைவழித் தாக்குதல் மேற்கொள்ளப்படமாட்டாது” என்று லெபனானின் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் கூறினார். தெரிவுசெய்யப்பட்ட சுட்டிப்பான இலக்குகள் மீதே தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும். அவ்வாறான தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படக்கூடிய

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## பறிபோகும் ... தொடர்ச்சி ...

மாணவர்களில் 58 வீதமான பெருந்தோட்ட மாணவர்களே ஆரம்பக் கல்வியை கற்று முடித்தவர்கள் என்று தெரியவருகின்றது.

இதேவேளை 2007 ம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களில் 7 வீதமானவர்களே க.பொ.த. உயர்தர வகுப்புகளுக்கு சென்றனர். இந்நிலையில் இடைவிலகலைக் கட்டுப்படுத்த ஒருவழி முன்னதாகவே அவ்வாறு இடைவிலகக்கூடிய மாணவர்களை இனங்காணுதலாகும்.இதற்கு மாணவர் வருகை, கல்விச் சித்தி, கல்விச் செயற்பாடுகளில் பங்கேற்பு முதலியவற்றை இனங்காணுதலாகும். இவற்றின் அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னதாகவே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாக பாடசாலைக்குச் செல்லாத அல்லது இடைவிலகுகின்ற மாணவர்கள் நெறிபிறழும் சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படுவதோடு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படும் நிலைமைகளும் அதிகமாகும் .

இதேவேளை சிறுவர்களை வேலைக் கமர்த்தும் நிலைமையும் மலையகத்தில் காணப்படுகின்றது. 06 தொடக்கம் 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களில் 10.3 வீதமான ஆண்களும், 14.6 வீதமான பெண்களுமாக மொத்தமாக 12.4 வீதமான சிறுவர்கள் ஏதேனுமொரு தொழிற்றுறையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழக பொருளியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி. ஆர்.சோபனாதேவி குறிப்பிடுகின்றார். பன்னாடுகளில் காணப்படுகின்ற பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், வறுமை, மனித குலத்துக்கு அப்பாலான செயற்பாடுகளால் சிறுவர் தொழிலாளர்கள் உருவாக்கப்படுகின்றனர்.

இவ்வாறு நெருக்கடிக்கு உள்ளாகும் சிறுவர்கள் எதிர்நோக்கும் முதல் சவாலாக பாலியல் ரீதியான வன்கொடுமைகள் காணப்படுகின்றன.இலங்கையிலுள்ள சிறுவர்களும் இதில் உள்ளடங்குகின்றனர். பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தி தொழிலுக்குச் செல்வதால் பல மில்லியன் கணக்கான குழந்தை களின் எதிர்காலம் ஆபத்தில் உள்ளதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது. இதனால் சிறுவர்கள் பாலியல் சுரண்டல்களை எதிர்கொள்ளும் வீதம் அதிகரித்துள்ளதாகவும் இதற்கு தீர்வினைக் காண்பதற்கு விரைவாக செயற்படாவிட்டால் நிலைமை மேலும் மோசமடையும் என்றும் அவ்வமைப்பு எச்சரித்துள்ளது.

இலங்கையில் சிறுவர் உரிமைகளை பேணும் நடவடிக்கைகள் பலவுள்ளன. 1990 ம் ஆண்டில் சிறுவர்கள் நலனைப் பாதுகாக்கும் நோக்குடன் தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபை உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பெண்களுக்கும், சிறுவர்களுக்குமான தனியான பொலிஸ் பிரிவு அமைக்கப்பட்டது. கட்டாயக் கல்வித் திட்டமும் சிறுவர் உரிமைகளைப் பேணுவதில் முக்கிய இடம் வகிக்கின்றது. சிறுவர் உரிமைகள் குறித்த விழிப்புணர்வுகளையும், ஆலோசனைகளையும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கிவருகின்றன.

### யுனிசெப்பின் நிலைப்பாடு

இதேவேளை இணையத்தில் பதிவேற்றப்படும் சிறுவர்களின் நிர்வாணப் புகைப்படங்கள் மற்றும் ஆபாசமான காணொளிகளை உடனடியாக நீக்குவதற்கான இணையவழிமுறை அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் தலைமையில் அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, உலகின் முன்னணி இணைய சிறுவர் பாதுகாப்பு உறுதிப்படுத்தல் நிறுவனங்களில் ஒன்றான ஐக்கிய இராச்சியத்தின் இணையத்தள கண்காணிப்பு அமைப்புடன் இணைந்து இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுவதோடு 'சேவ் த சில்ரன் அமைப்பு இதற்கான நிதியுதவியினை வழங்கியுள்ளது. இதேவேளை சிறுவர் பாதுகாப்பு குறித்து இதுவரையில் எந்தவொரு அரசாங்கமும் கவனம் செலுத்தாமல் இருந்தமை மிகப்பெரிய பிரச்சினைக்கு அடித்தளமாகியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். மேலும் தற்போதைய நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது கடினமாக இருந்தாலும் சிறுவர் பாதுகாப்பிற்காக மேற்கொள்ள வேண்டிய அனைத்து செயற்பாடுகளையும் தாம் முன்னெடுக்கப் போவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சிறுவர்கள் மற்றும் இளையோர் கட்டளைச் சட்டத்தில் நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, அவை 2024 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளன.இது இலங்கை சிறுவர்களின் உரிமைகள் மற்றும் நலன்களை பாதுகாப்பதற்கான முக்கியமானதொரு முன்னெடுப்பாகும் என யுனிசெப் அமைப்பு ஏற்கனவே வலியுறுத்தி இருந்தது. சிறுவர்கள் சமூகச் சக்கரத்தில் முக்கியத்துவம் மிக்கவர்களாக விளங்குகின்றனர். எனவே இவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து நேர்வழியில் செல்லவைப்பது சகலரினதும் மிக முக்கிய பணியாகும் என்பதோடு இவர்களை புறந்தள்ளுவதாலோ அல்லது உரிமைகளை மழுங்கடிக்கச் செய்வதாலோ பாதக விளைவுகள் பலவற்றுக்கும் முகம் கொடுக்க வேண்டிவரும் என்பதனை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

• • •

## ஹிஸ்பொல்லா... தொடர்ச்சி ...

சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஆனால் முற்று முழுதான தரைவழித் தாக்குதலாக அது இருக்க மாட்டாது.''

தெரிவுசெய்யப்பட்ட ஹிஸ்பொல்லா இலக்குகளின் மீது, ஆளில்லா விமானத் தாக்குதல்களையும், விமானத்தாக்குதல்களையும் இஸ்ரேல் மேற்கொள்ளும் என்ற கருத்தில் அதிகமான ஆய்வாளர்கள் உடன்படுகிறார்கள்.

ஹிஸ்பொல்லாவுக்கு மக்கள் ஆதரவு அதிகமாகக் கொண்டு, வடபகுதியில் அமைந்திருக்கின்ற பெக்கா பள்ளத்தாக்கின் மீது தனது தாக்குதல்கள் இஸ்ரேல் தற்போது அதிகமாக்கியிருக்கிறது.

எதிர்வரும் நாட்களில், லெபனானில் உள்ள ஹிஸ்பொல்லா மீது இஸ்ரேல் தனது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தும் என்பது எதிர்பார்க்கப்படக்கூடியது. ஆனால் "பெய்ரூத்தை இன்னொரு காஸாவாக மாற்றுவோம்"; அல்லது "லெபனானைக் கற்காலத்துக்கு திரும்ப அனுப்புவோம்'' போன்ற இஸ்ரேலின் முன்னைய சூளுரைகளை நிறைவேறுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பது இந்த ஆய்வாளர்களின் கருத்தாகும்.

கடந்த ஆறு மாதங்களாக காஸா மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் 33.000 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கும் சூழலில், இஸ்ரேல் அரசின் மீதான அழுத்தம் கணிசமான அளவு அதிகரித்திருக்கிறது.

'உலகின் மைய சமையலறை' (World Central Kitchen) என்ற அமைப்பில் பணியாற்றும் 7 தன்னார்வத் தொண்டர்கள் இஸ்ரேலின் தாக்குதலின் கொல்லப்பட்ட பின்னர், இஸ்ரேலின் மிக நெருங்கிய நட்பு நாடுகளான அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகள் தங்களது தொனியை மாற்றியிருக்கின்றன.

இவை இப்படி இருப்பினும், ஹிஸ்பொல்லா மீது தனது தாக்குதல்களை தீவிரப்படுத்துவதற்குப் போதிய ஆதரவு தனக்கு இருப்பதாகவே இஸ்ரேல் கருதுகிறது.

"அமெரிக்காவைப் பொறுத்தவரையில் இது தேர்தல் ஆண்டு. அமெரிக்காவால் தொடர்ந்தும் இஸ்ரேலை ஆதரிக்கக்கூடிய சக்தி இருக்கின்றபோதிலும், இந்தக் காரணத்தால் அமெரிக்க ஆதரவில் சற்றுத் தயக்கத்தைக் காணமுடிகிறது.

"போர் விரிவடைவதற்காக வாய்ப்புகள் குறிப்பிடத்தக்க அளவு அதிகமாகவே இருக்கின்றன.''

### றாவா (Rafah) நகர்மீது இஸ்ரேல் தாக்குதலைத் தொடுக்கும் ஆபத்து இன்னும் தொடர்கிறது

"அடுத்து தனது தாக்குதல்களை இஸ்ரேல் எங்கே குவிமையப்படுத்தப் போகின்றது என்பதும் அல்லது எதிர்பார்க்கப்படும் இவ்வாறான தாக்குதல்கள் உண்மையில் நடைபெறுமா? என்பது கூட இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. எல்லாவிதமான தெரிவுகளுக்குமான வாய்ப்புகள் இருக்கின்றன'' என்று காஸீர் சுட்டிக்காட்டினார்.

காஸாவில் போரை நிறுத்தும் படி இஸ்ரேலுக்கு அழுத்தம் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்ற போதிலும், காஸாவிலிருந்து தனது ஒரு பகுதி துருப்புகளை இஸ்ரேல் மீள அழைத்த விடயம், அங்கே போர் முடிந்துவிட்டது என்பதைக் கட்டியம் கூற முடியாது.

காஸாவின் ஏனைய பிரதேசங்களிலிருந்து தப்பி வந்த 1.5 மில்லியன் மக்கள் மக்கள், தற்போது தஞ்சடைந்திருக்கின்ற காஸாவின் தென்பகுதியில் அமைந்துள்ள நகரமான றாவாவில் இராணுவத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் என்று நெத்தன்யாகு தொடர்ந்து வலியுறுத்திவருகிறார்.

அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் நிர்வாகம், நெத்தன்யாகுவின் அரசின் மீது கடுமையான விமர்சனங்களை வைக்கின்ற பொழுதிலும், அமெரிக்க இராஜாங்க அமைச்சு, எவ்-35 ரக தாக்குதல் விமானங்கள் 25 ஐயும், அவற்றுக்குரிய இயந்திரங்களையும், அதே வேளையில், 900 கிலோ கிரோம் நிறையுடைய 1800க்கும் மேற்பட்ட எம்கே 84 வகைக் குண்டுகள், 225 கிலோ கிராம் எடையுடைய எம்கே 82 வகைக் குண்டுகள் 500 ஐயும் கொண்ட ஒரு ஆயுதத் தொகுதியை இஸ்ரேலுக்கு வழங்கியிருப்பதாக "வோஷிங்டன் போஸ்ட்' என்ற நாளிதழ் மார்ச்; மாதத்தின் கடைசிப்பகுதியில் செய்தி வெளியிட்டிருந்தது.

பல்வேறு போர்முனைகளில் இந்த ஆயுதங்கள்பயன்படுத்தப்படக்கூடியசாத்தியக்கூறுகள் இருக்கின்றன. காஸாவில் நடைபெற்று வரும் போரால் ஏற்கனவே கடுமையாகப் பாதிக்கப்பட்டு, தற்போது றாவாவில் தஞ்சமடைந்திருக்கின்ற பாலஸ்தீன மக்களுக்கு எதிராகக்கூட இந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகமாக இருக்கின்றன.

**நன்றி: அல்ஜஸீரா**

## நிலக் கூட்டுரிமை ... தொடர்ச்சி ...

நடவடிக்கைக்கும், யுக்திய நடவடிக்கையால் சிறையில் தள்ளப்படும் ஏராளமான தமிழ் இளையோருக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு. இனியொரு தலைமுறை விடுதலை பற்றிய நம்பிக்கையை கொண்டிருக்கக்கூடாது என்பதற்காக இவை உருவாக்கப்படுகின்றது என்பதன் உள்நோக்கம் கவனிக்கப்பட வேண்டும்.

ஆய்வுகள் எல்லாவற்றிற்கான தீர்வைத் தரமுடியாவிட்டாலும், உண்மை நோக்கிய தேடலை உருவாக்கி நம்பிக்கைகளை உருவாக்குகின்றது. தமிழ்த்தேசிய விடுதலை மீதான நம்பிக்கையை தக்க வைப்பதன் மூலம் தான் விடுதலைப் பயணத்தை தொடர்ந்து முன்னெடுக்க முடியும்.

**முற்றும்.**

### முல்லைத்தீவில்... தொடர்ச்சி ...

இரண்டு ஜனாதிபதி அவர்களும் பிழைதான் விட்டிருக்கின்றார்கள் என்ற கருத்தையும் ஏற்றுகொண்டு அதாவது, இந்த காணிகள் பறிக்கப்பட்டதில் பிழை நடந்திருக்கின்றது என்ற கருத்தை கூறிக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஊடாக காணிகளை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை பார்ப்பதாக அந்த அறிக்கையில் குறிப் பிட்டிருந்தார்.

இரண்டு இலட்சத்தி பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட காணிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலகங்களிலுமாக தமிழ் மக்களுடைய காணிகளை விடுவிக்க ஆவன செய்ய வேண்டும். நிலங்களை அபகரித்து வைத்துக் கொண்டு சிங்கள மக்களை குடியேற்றுவதும், தங்களுடைய திணைக்களங்களூடாக அபகரித்து வைத்து கொண்டிருப்பதும் தான், அரசாங்கத்தினுடைய செயற்பாடுகள் அல்ல என்பதை புரிந்து கொண்டு மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட காணிகளை விடுவிக்க வேண்டும்.

இதே ஒரு நிலைமையில் ஆறுகள் உள்ள நீர்பரப்புகளாக சுண்டிக்குளம், நாயாறு, நந்திக்கடல் ஆகியன கிட்டத்தட்ட 69401 ஒரு ஏக்கர் நிலம் நீர்நிலைகளோடு சேர்ந்த நிலங்களாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினுடைய புள்ளிவிவரத்தின் ஊடாக நாங்கள் அறியக்கூடியதாக இருக்கின்றது. 29401 ஏக்கர் நிலம் வனஜீவராசிகள் திணைக்களம் கைப்பற்றியுள்ளது. 130 பேருக்கு எதிராக வனஜீவராசிகள் திணைக்களத்தினுடைய வழக்கு தவணையிடப்பட்டு எதிர்வரும் வைகாசி மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அறுநூறுக்கும் மேற்பட்ட ஏக்கர் மக்களுடைய நிலங்களை இரணைப்பாலை, செம்மண்குன்று, அம்பலவன் பொக்கணை, மாத்தளன், வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் போன்ற இடங்களில் உள்ள விவசாயிகளுடைய காணிகள் தான் இவை. இந்த காணிகளை கூட வனஜீவராசிகள் திணைக்களம் தங்களுடைய பறவைகள் சரணாலயம் என்ற பகுதிக்குள் இணைத்து அவர்களுடைய காணிகளையும் பறித்து வைத்திருக்கிறார்கள்.

தமிழ் மக்களை ஒடுக்கும் விதமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாறாக முழு ஏக்கர் காணிகளையும் அபகரித்து கொண்டு சென்றால் மக்கள் எங்கே போவது? எனவும் கேள்வி எழுப்பினார்.

• • •

### பொறுத்திருக்க... தொடர்ச்சி ...

வாக்கெடுப்பாக இதனை மாற்றலாம். பேரவாய்ப்பு என்பது அடுத்த கட்டம்.

தற்போது ஜனாதிபதித் தேர்தலில் மூவர் போட்டியிடுவார்கள் என்பது உறுதியாகியிருக்கின்றது. ரணில், சஜித், அநுரகுமார ஆகியோருக்கு இடையிலான போட்டியில் எவரும் 50 வீதமான வாக்குகளைப் பெற முடியாத நிலை ஏற்படலாம். ஏனெனில் சிங்கள வாக்குகள் சிதறலாம். அந்த இடத்தில் தமிழ் வாக்குகள் ஒரு நிர்ணயகரமான பாத்திரத்தை வகிக்க முடியும். இதனை ஒரு பேரவாய்ப்பாகப் பயன்படுத்த முற்படுபவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். ஆனால், தமிழ் மக்கள் இதனை தமக்கான ஒரு பொதுஜன வாக்கெடுப்பாகப் பயன்படுத்த வேண்டும் என்றுதான் நான் கருதுகிறேன்.

அந்த வகையில் தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழ்க் கூட்டுணர்வைப் பிரதிபலிப்பவராக இருக்க வேண்டும். அவர் ஒரு கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துபவராக இருக்க முடியாது. அதாவது, கட்சியைக் கடந்து, தனிநபர் என்பதைக் கடந்து ஒரு கொள்கையைப் பிரதிபலிப்பவராக அவர் இருக்க வேண்டும்.

சில கட்சிகள் இப்போதும் கேட்கின்றன, ஏன் அவசரப்படவேண்டும் என்று. அவ்வாறு கேட்பவர்கள் யார் என்றால், பொது வேட்பாளர் குறித்து சந்தேகம் உள்ளவர்கள்தான். பொது வேட்பாளர் குறித்து முடிவெடுப்பதாக இருந்தால் இப்போதே முடிவெடுக்க வேண்டும். தமிழ் மக்களை ஒருங்கிணைப்பதற்கு இது ஒரு அருமையான சந்தர்ப்பம். இதனை பிறகு பார்க்கலாம் எனச் சொல்பவர்கள் யார் என்று பார்த்தால், அவர்கள் டீலுக்குப் போவதற்கான வாய்ப்பை எதிர்பார்த்துள்ளவர்கள்.

எந்தவொரு பிரதான சிங்கள வேட்பாளரும் தமிழ் வேட்பாளர்களுடன் டீலுக்கு வரத் தயங்குவார்கள். அவ்வாறு வந்தால்கூட, அது ஒரு பகிரங்கமான டீலாக இருக்காது. அது அவருக்கான சிங்கள வாக்குகளைப் பாதிக்கும். அதனால், அவர்கள் தனிப்பட்ட முறையிலான பேரங்களுக்கு முன்வரலாம்.

• • •

### இலங்கை... தொடர்ச்சி ...

கொண்டுள்ளன.

#### ரணிலின் எதிர்பார்ப்பு

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வைக் கொண்டு வருகிறோம் எனக் கூறிக்கொள்ளும் தற்போதைய ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம், பொருளாதார நெருக்கடிக்கான தீர்வுகளை பாதுகாப்பதாக தன்னை சித்தரிக்க இந்த விஜயத்தை பயன்படுத்திக்கொண்டது. இது அவர்களின் இமேஜை உயர்த்தி, அவர்களின் அரசியல் நிலைப்பாட்டை ஸ்திரப்படுத்தும் என்பது ரணில் தரப்பின் எதிர்பார்ப்பு.

இருந்த போதிலும் இலங்கை - ஈரான் கூட்டாண்மையின் எதிர்காலத்தை பல சவால்கள் சூழ்ந்துள்ளன. ஈரான் மீதான அமெரிக்காவின் தடைகள் இலங்கைக்கு எண்ணெய் வர்த்தகத்தை கடினமாக்கலாம். இலங்கையில் அரசியல் நிலையற்றதாகவே உள்ளது, மேலும் தலைமையில் ஏற்படக்கூடிய எந்த மாற்றமும் "எண்ணெய்க்கான தேயிலை" ஒப்பந்தத்தின் தொடர்ச்சியை பாதிக்கலாம்.

#### ஈரானின் தொழில்நுட்பம்

இவ்வாறான சவால்கள் இருந்தபோதிலும், அதற்கு அப்பால், ஒத்துழைப்புக்கான கதவுகள் சில விடயங்களில் திறந்தே இருக்கின்றது. ஈரான் விவசாயம் மற்றும் தொழில்நுட்பம் உட்பட பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்றுள்ளது. இந்தத் துறைகளில் அறிவுப் பரிமாற்றம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு நீண்டகாலத்தில் நன்மை பயக்கும். அதனை வழங்குவதற்கான உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஈரானிய ஜனாதிபதியின் இலங்கை விஜயம், முதன்மையாக பொருளாதாரக் கருத்தினால் உந்தப்பட்ட அதேவேளையில், கணிசமான அரசியல் முக்கியத்துவத்தைக்கொண்டுள்ளது. இது இலங்கையின் புதிய பங்காளிகளைத் தேடுவதையும், பரந்த பொருளாதார உறவுகளுக்கான ஈரானின் விருப்பத்தையும், பிராந்திய புவிசார் அரசியலின் சிக்கல்களையும் குறிக்கிறது.

இந்த உறவின் நீண்டகால தாக்கத்தை பார்க்க வேண்டும். ஆனால் இந்த விஜயம் சந்தேகத்திற்கு இடமின்றி இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் ஒரு புதிய அத்தியாயத்தைத் திறந்துள்ளது. இந்த புதிய அத்தியாயம் எவ்வாறு அமையும் என்பதை சர்வதேச அரசியல், இராஜதந்திர நகர்வுகள்தான் தீர்மானிக்கப்போகின்றன. இதற்குள் இலங்கையும், ஈரானும் எவ்வாறு அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்லப்போகின்றன என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

• • •

### ரெஸ்லா நிறுவ... தொடர்ச்சி ...

நிறுவனத்திற்கு சவாலாக அமைந்துள்ளது. அதனை தடுப்பதற்கான பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு அண்மை யில் அமெரிக்காவின் திறைசேரிச் செயலாளர் சீனாவுக்கு சென்ற போதும் அது பலன்தரவில்லை.

செங்கடலில் குதீஸ் அமைப்பினர் மேற்கொள்ளும் தாக்குதல்கள், மற்றும் ஜேர்மனில் உள்ள ரெஸ்லா நிறுவனம் மீதான தாக்குதல் என்பன அந்த நிறுவனத்தின் வர்த்தகத்தை அதிகம் பாதித்துள்ளது. வாகனங்களின் விற்பனை 8.5 விகிதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது.

### தந்தை செல்வா... தொடர்ச்சி ...

மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. மேலும் பாவரங்கள், சிறப்புரைகளும் இடம் பெறவுள்ளதாக ஏற்பாட்டு குழு தெரிவித்துள்ளது.



## யாழ் தொடக்கம் ... தொடர்ச்சி ...

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்,பிரதேச செயலாளர்கள் அந்த திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நிலையிலும் அரசாங்கம் அந்த திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கையினை எடுத்துவருகின்றது.இந்த திட்டத்திற்கு பின்புலமாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் செயற்பட்டுவருவதாக அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கதிரவெளி தொடக்கம் காயன்குடா வரையிலான மக்கள் இந்த இல்மனைட் தொழிற்சாலைக்கு எதிராக போராடிவரும் நிலையில் வறிய மக்களின் நிலையினை தமக்கு சாதகமாக பயன்படுத்தி அவர்களுக்கு பொருட்களையும் பணத்தையும் வழங்கி எதிர்ப்பு நிலையினை மாற்றுவதற்கான முயற்சிகள் பிள்ளையான் போன்றவர்களினால் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அதற்கு எதிராகவும் வாகரை பிரதேச மக்கள் போராடவேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

இதேபோன்று வாகரையில் இறால் பண்ணை என்ற திட்டத்தினை முன்னெடுத்துவரும் நிலையில் இந்த இறால் பண்ணை ஆரம்பிக்கப்படுமானால் வாகரையில் நன்னீர் மீன்பிடியை நம்பியுள்ள சுமார் 15ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என வாகரை பிரதேசத்தின் சமூக செயற்பாட்டாளரான தபேந்திரன் தெரிவிக்கின்றார். “கடந்த காலத்தில் 2500 ஏக்கர் நிலப்பரப்பினை ஆற்றினை அண்டிய வகையில் இந்த இறால் வளர்ப்புக்கு ஒதுக்க நடவடிக்கையெடுத்தபோது, நாங்கள் தொடர்ச்சியாக போராட்டம் நடாத்தி அதனை தடுத்து நிறுத்தி னோம். ஆனால் இன்று அந்த திட்டத்தினை மீண்டும் நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படுகின்றன.

அந்த ஆற்றினை நம்பியே அந்த 15ஆயிரம் குடும்பங்களும் உள்ளன.அங்கு இறால் வளர்ப்பு நடைபெற காணிகள் வழங்கப்படுமானால் முதலாளிகள் இலாபம் ஈட்டுவார்கள் ஆனால் ஆற்றினை நம்பியுள்ள மீனவர்கள் வாழ்வாதாரத்தினை இழப்பார்கள்.அத்துடன் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள சுமார் 45ஆயிரம் கால்நடைகள் உள்ள மேய்ச்சல் தரை பாதிக்கப்படுவதுடன் வாகரையினை தாங்கிய நிலையில் உள்ள கண்டல் தாவரங்களும் அழிக்கப்படும் நிலையேற்படும்.

இதேபோன்று ஆற்றினை சூழவுள்ள காடுகளும் அழிக்கப்பட்டுத்தான் இந்த வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.கடல்நீரை ஆற்றுக்குள் பாய்ச்சிதான் இறால் பண்ணை செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.இவை அனைத்தும் எதிர்காலத்தில் வாகரை பிரதேசத்தினை அழிக்கும் செயற்பாடுகளாகவே நாங்கள் பார்க்கின்றோம்.யுத்தகாலத்தில் நாங்கள் போராடி பாதுகாத்த பகுதியை இன்று இலகுவில் அழிக்கும் நிலையினை பார்த்துக்கொண்டு நாங்கள் பொறுமையாக இருக்கமுடியாது. எமது நிலத்தினை பாதுகாப்பதற்கு நாங்கள் உயிரைக்கொடுத்து போராடவும் தயாராகயிருக்கின்றோம்” என்று தபேந்திரன் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் வாகரை பிரதேசத்தின் இந்த அழிவின் பின்னணியில் பிள்ளையான் மற்றும் கிழக்கு மாகாண ஆளுனர் செயற்படுவதாக வாகரை பிரதேச மக்களும் அரச உயர் அதிகாரிகளும் குற்றச்சாட்டுகளை முன்வைத்துவரும் நிலையில் வாகரை பிரதேச மக்களின் இந்த போராட்டத்தினை வடகிழக்கு தழுவிய போராட்டமாக முன்னெடுத்து வாகரை பிரதேச மக்களின் இருப்பினை தக்கவைப்பதற்கு தமிழ் தேசிய பரப்பில் செயற்படும் அனைவரும் முன்வரவேண்டும்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான போராட்டம்போல் யாழ் தொடக்கம் வாகரை வரையான போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.கிழக்கில் தமது இருப்பினை தக்கவைப்பதற்கு வடகிழக்கு இணைந்த போராட்டங்களை முன்னெடுப்பதன் ஊடாக ஓரளவாவது நிலைமையினை கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளாக அமையும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

• • •

## இலங்கை தமிழ் ... தொடர்ச்சி ...

கொள்ளப்பட்டது இந்த வழக்கை பொதுநலன் கருதி முடிவுக்கு கொண்டு வரவேண்டும் கட்சியாப்பை மீறியதாக இங்கு எதுவும் சொல்லப்படவில்லை குறிப்பாக சில விதிகளில் மேலதிகமாக சேர்க்கப்பட்டுள்ளது இதன் பிரகாரம் வழக்கு தொடர்ந்தால் அதனை வெற்றி கொள்ளலாம் ஆனால் காலம் செல்லும் இதனால் வழக்கை காலம் சென்ற நிலையில் வெற்றி கொண்டால் தோல்வியாகவே கருதப்படும். வழக்காளி கோரும் நிவாரணத்தை வழங்க தயாராக இருக்கிறோம்.

எங்களுடைய நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை இதனை வழக்காளி தனது சட்டத்தரணி ஊடாக தெரிவிக்க வேண்டும். வழக்கை வாபஸ் பெற வேண்டும் என எனது வாதத்தை நீதிமன்றில் தெரிவித்தேன் என்றார்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் எதிர்கால கட்சி நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் திருகோணமலையில் கடந்த புதன்கிழமை (24) இடம் பெற்றது.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ச.குகதாசன் தலைமையில் இடம் பெற்ற குறித்த கலந்துரையாடலில் கட்சியின் எதிர்கால ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தொடர்பில் கட்சியின் முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடப்பட்டன. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஸ்ரீதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## உக்ரைனுக்கு ... தொடர்ச்சி ...

னெடுத்துவரும் அமெரிக்கா தான் அமைதித் தீர்வு தொடர்பில் ஆர்வம் காட்டுவதுபோல் நடித்தவாறு, மறுபுறம் உக்ரைனுக்கு இரகசியமாக நீண்டதூர ஏவுகணைகளை வழங்கி ரஸ்யாவுக்கு எதிரானதாக்குதல்களைதீவிரப்படுத்திவருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஏரிஏசிஎம்எஸ் எனப்படும் இந்த புதிய ஏவுகணை 300 கி;.மீ தூரவீச்சுக்கொண்டது. கடந்த பெப்ரவரி மாதம் இந்த ஏவுகணைகளை அமெரிக்கா உக்ரைனுக்கு இரகசியமாக வழங்கியதாக வெள்ளைமாளிகை பேச்சாளர் ஜக் சுலிவன் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த வகை ஏவுகணையின் குறுந்தூர அதாவது 50 கி.மீ வீச்சுக் கொண்ட ஏவுகணைகளை தாம் ஏற்கனவே சுட்டு வீழ்த்தியுள்ளதாகவும், புதிய ஏவுகணைகள் களமுனையில் மாற்றங்களை ஏற்படுத்தாது எனவும் ரஸ்யாவின் படைத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையே, உக்ரைனுக்கு அமெரிக்கா 61 பில்லியன் உதவித்தொகையை வழங்கியுள்ளதுடன், ஒரு பில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களையும் வழங்கியுள்;ளது. அதேசமயம் பிரித்தானியாவும் 500 மில்லியன் பவுண்ஸ் பெறுமதியான ஆயுதங்களை வழங்கியுள்ளது..

இஸ்ரேலுக்கு 28 பில்லியன் டொலர்களையும், தாய்வானுக்கு 8 பில்லியன் டொலர்களையும் அமெரிக்கா வழங்கியுள்ளது.

## உலகில் மிகச் ... தொடர்ச்சி ...

சிரியா மற்றும் லெபனானில் இடம்பெற்ற தாக்குதல்களும் அதன் பின்விளைவுகள் தொடர்பான தவறான கணிப்புக்களும் இஸ்ரேலிய புலனாய்வுத்துறையின் பின்னடைவாக பார்க்கப்படுகின்றது. இஸ்ரேலினுள் ஈரான் தாக்குதல் நடத்தமாட்டாது என இஸ்ரேலின் புலனாய்வுத்துறை தவறான நம்பிக்கையை இஸ்ரேலிய அரசுக்கு கொடுத்துள்ளது.

அது மட்டுமல்லாது நவாட்டிம் வான் படைத்தளம் மீதான ஈரானின் தாக்குதலை தடுக்கமுடியாது போனதும் இஸ்ரேலிய படையினரின் மனநிலையை அதிகம் பாதித்ததாக கூறப்படுகின்றது. அதாவது ஈரான் மற்றும் ஹமாஸின் பலத்தை தவறாக மதிப்பிட்டதும் புலனாய்வுத்துறையின் தோல்வியாகவே பார்க்கப்படுகின்றது.

வடக்கு மற்றும் தெற்கு காசா பகுதியில் படைத்துறை மேலாண்மையை ஏற்படுத்த தவறியமை, ஈரானை வெற்றிகொள்ளமுடியாமை, ஹிஸ்புல்லாக்களின் தாக்குதல்களை தடுக்கத் தவறியமை மற்றும் 7 மாதங்கள் கடந்த நிலையிலும் பிணைக்கைதிகளை மீட்கமுடியாமை போன்றவை இஸ்ரேலின் படைத்துறை மற்றும் அரசியல் பீடங்களை ஆட்டம்காணவைத்துள்ளது.

அதாவது படைத்துறை மற்றும் அரசியல் ரீதியாக உக்ரைனை விட இஸ்ரேல் மிகப்பெரும் பின்னடைவுகளை சந்தித்து வருவதையே இது காட்டுகின்றது. இந்த நிலையில் அமெரிக்கா தனது படையினரை கட்டுப்படுத்துவதாக இஸ்ரேலிய தரப்பில் இருந்து குற்றச்சாட்டுக்களும் கிளம்பியுள்ளன.

## சீனா நிறுவன ... தொடர்ச்சி ...

நிறுவனத்தின் வர்த்தகத்தை பாதிப்பதுடன், ஐரோப்பிய ஒன்றிய போட்டி நிறுவனங்களுக்கு அனுகூலமாக அமையும். ஐரோப்பிய ஒன்றியத்திற்கும், சீனாவுக் கும் இடையிலான வர்த்தக உறவுகளையும் இது பாதிக்கும். ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் இந்த நடவடிக்கையால் அச்சமடைந்துள்ளன என சீனா தெரிவித்துள்ளது.

நிக்ரெக் என்ற சீன நிறுவனம் விமான நிலையங்கள் மற்றும் நாடுகளின் எல்லைகளில் உள்ள சுங்கத்திணைக்களங்களில் பயன்படுத்தப்படும் ஸ்கானிங் உபகரணங்களை தயாரித்துவருகின்றது.

## காசா படுகொலை ... தொடர்ச்சி ...

செய்யப்பட்டுள்ளனர். இந்த கைதுகளைத் தொடர்ந்து ஹவாட் மற்றும் பிறவுன் ஆகிய பல்கலைக்கழகமாணவர்களும்போரட்டங்களில் குதித்துள்ளனர்.

பாலஸ்தீன மக்களுக்கு தமது ஆதரவுகளைத் தெரிவிப்பதே இந்த போராட்டங்களின் நோக்கம் என மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

காசா பகுதியில் கடந்த 200 நாட்களாக இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதல்களில் இதுவரையில் 34,260 இற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டமக்கள் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 60 விகிதமானவர்கள் சிறுவர்களும், பெண் களுமாவார் கள்.

பாலஸ்தீனம் சுதந்திர நாடாக மலர வேண்டும் என்பதே மாணவர்களின் கோரிக்கையாக உள்ளது. வியட்னாமில் அமெரிக்கா மேற்கொண்ட போரின்போதும் அமெரிக்க பல்கலைக்கழக மாணவர்கள் வியட்னாமுக்கு ஆதரவாகபோரட்டங்களைமேற்கொண்டிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.